பக்கங்கள்: 29

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 22 ஞாயிற்றுக்கிழமை 05.02.2023 கதிர் 89

**இது ரகசியம் அல்ல!**

பல வருடங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம் இது. சரியாக எந்த ஆண்டு என்று நினைவிலில்லை. மாவை சேனாதிராசா உடலளவிலும் மனதளவிலும் தளராதிருந்த காலம் அது. போராட்டம் வெடிக்கும் என்று முழக்கமிட்டுக்

2

சுதந்திரத்தை அடையும் வரை

# காந்திய வழியில் அறவழிப் போர்



## உலகுக்கும் அரசுக்கும் தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

சமஷ்டிக் கட்டமைப்பிலான உச்சகட்ட அதிகாரப் பகிர்வு முறை வடக்கு கிழக்கிலே ஏற்படுத்தப்படுவதற்கு நாங்கள் தயார். அது கொடுக்கப்படாமல் இருக்கிற ஒவ்வொரு கணமும் நாங்கள் போராடுவோம். நீங்கள் தரப்போகிறீர்கள் என்று பொறுத்திருக்கப் போவ தில்லை. காந்தீய வழியிலே அமைதி வழியிலே அறவழியிலே அகிம்சை வழியிலே நாம் பெரும் போராட் டத்தை முன்னெடுப்போம்.

இவ்வாறு மட்டக்களப்பில் அறிவித்துள்ளது தமிழ் அரசுக் கட்சி. இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கரிநாளாக கடைப் பிடித்து எதிர்ப்பை வெளிப்படுத்திய போராட்டத்தில் கட்சியின் பேச்சா ளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இதனை அறிவித்தார்.

2

## தெற்கிலும் பல இடங்களில் நேற்று எதிர்ப்பு போராட்டம்

கொழும்பு காலி முகத்திடலில் அரசு இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருந்த அதேநேரத்தில் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல இடங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் இடம்பெற்றன.

நாடுஎதிர்கொண்டிருக்கும்பொருளாதார நெருக்கடி, மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றனரா? ஊழல் மோசடிக்காரர்கள் சுதந்திரமாக நாட்டில் சுற்றித் திரிகின்றனர் என போராட்டக்காரர்கள் முழக்கங்களை எழுப்பியிருந்தனர். பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, எல்பின்ஸ்ட் அரங்குக்கு முன்னாள் சனிக்கிழமை இரவு ஒன்று கூடிய ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொண்டனர்.

நாட்டின் சுதந்திர தினத்தன்று

20

## கிழக்கு நோக்கிப் புறப்பட்ட பேரணி கிளிநொச்சியைச் சென்றடைந்தது

தமிழர்தேசம்மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து என்ற முழக்கத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திலிருந்து சனிக்கிழமை காலை தொடங்கிய பேரணி மாலை கிளிநொச்சி, இரணைமடுவைச் சென்றடைந்தது.

யாழ். நகரத்தின் ஊடாகச் செம்மணி சந்திவரையும் கால்நடையாகச் சென்ற பேரணி அங்கிருந்து வாகனங்கள் மூலம் தொடர்ந்தது. சாவகச்சேரி, பளை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் கால்நடையாகவும் பின்னர் வாகனங்கள் மூலம் என்றும் தொடர்ந்த பேரணி மாலை கிளிநொச்சியைச்

20

## அரசியல் தீர்வை வழங்க சிங்கள தேசம் தயாரா?

### மட்டக்களப்பில் மாவை கேள்வி

தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வழங்க சிங்கள தேசம் தயாராக உள்ளதா? – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கேள்வி எழுப்பினார்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை 'இருள் சூழ்ந்த சுதந்திரம்' எனப் பிரகடனப்படுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கொண்ட போராட்டம்

20





மிகக் குறைந்த செலவில்

## இலங்கையின் பெருமையை மீண்டும் வெளிஉலகிற்கு வெளிக்காட்டிய நாள்

### சுதந்திர தினம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் அறிக்கை

மிகக் குறைந்தச் செலவில் பெருமைக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கையின் 75ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களின் பிரதான நோக்கம் இலங்கையர்களின் பெருமையை மீண்டும் உலகுக்கு வெளிக்காட்டுவதாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர்

20

## சுதந்திர தின நாளில் '13' தொடர்பில் ரணிலுடன் பேசிய இந்தியப் பிரதிநிதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்தியாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி.முரளிதரன் நேற்று மாலை ஜனாதிபதிசெயலகத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அரசமைப்பின் 13

20

## புதிய சுதந்திரப் போராட்டம் தேர்தலின் பின்னர் ஆரம்பம்



### காலியில் நேற்று சஜித் சூளுரை

நாட்டைக் கட்டியெழுப்பும் புதிய சுதந்திரப் போராட்டம் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் ஆரம்பிக்கப்படும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

காலி மாவட்டத்தின் ஹினிதும தொகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்

20

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தார். வலி. வடக்கில் நில விடுவிப்புக்கான சத்தியாக்கிரகம் என்று போராட்டங்களையும் அவர் தலைமை தாங்கிக் கொண்டிருந்த நேரம்.

ஒருதடவை அப்படிப்பட்ட போராட்டம் ஒன்றில் தலைவர் மாவைக்கு யாரோ ஒருவர் காந்தி குல்லாயை அணிவித்திருந்தார். அதனைப் பத்திரிகைகள், அதிலும் குறிப்பாக அப்போது வண்ண அட்டைகளுடன் வந்துகொண்டிருந்த வாரப் பத்திரிகைகள் பெரிதாகப் போட்டிருந்தன. காந்தியின் வெள்ளைக் குல்லாயுடன் அதில் மாவை கம்பீரமாக இருந்தார்.

அதைப்பார்த்தபின்னர் என்னுடனும் நண்பர்களுடனும் பேசிக் கொண்டிருக்கும்போது, அந்தப் படம் நன்றாக இருக்கிறது, அந்தக் குல்லாயை எல்லோருக்கும் கொடுத்து அதனை எமது அகிம்சைப் போராட்டத்தின் அடையாளமாக மாற்றிக்கொள்ளவேண்டும், வன்முறைப்போராட்டம் எமது வழியல்ல என்பதை உலகிற்கு எடுத்துச் சொல்ல அது நல்லதொரு வழி என்று சொன்னார் சுமந்திரன். அதைச் செயற்படுத்தவேண்டும் என்றும் சிலாகித்துக்கொண்டார்.

ஆனால் அதைச் செயற்படுத்த அவருக்குப் பல ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. நிச்சயமாக 6, 7 ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதி அது. மாவைக்குக் குல்லா அணிவித்த அந்த போராட்டத்திற்குப் பிறகு ஆட்சி மாற்றம், மைத்திரி – ரணிலை அதிகாரத்திற்குக் கொண்டுவந்தது, புதிய அரசமைப்பு உருவாக்கம், அது நிறைவேறிவிடும் என்கிற கனவு, எல்லாவற்றுக்கும் மேலாக சிங்கள ஆட்சியாளர்களுடன் நட்புறவோடு நடந்துசென்றால் தீர்வு ஒன்றைக் கண்டுவிடலாமோ என்கிற அவரது எதிர்பார்ப்பு ஆகியவற்றால் சுமந்திரன் ஒருவேளை அந்தக் குல்லாவை மறந்திருக்கக்கூடும்.

மாவையின் தலையில் இருந்ததற்குப் பின்னர் அந்தக் குல்லாய் நேற்றுவரையில் வேறு எங்கும் என் கண்ணில் பட்டதில்லை. திடீரென மட்டக்களப்பில் நேற்று அந்தக் குல்லாய்களைப் பலரதும் தலைகளில் பார்த்ததும் பழைய நினைவுகள் வந்தன. மாவைக்கு இந்தத் தடவையும் அந்தக் குல்லாய் அணிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அது சுமந்திரனுக்குத்தான் கனகச்சிதமாகப் பொருந்தியிருந்தது.

அதைப் போட்டுக்கொண்டு, காந்திய வழியில், அமைதி வழியில், அற வழியில், அகிம்சை வழியில் தமிழர்களின் சுதந்திரத்திற்கான போராட்டம் தொடரும் என்று அரசுக்கும் சர்வதேசத்திற்கும் அவர் அறிவித்தார். அவரது பேச்சில் உரமும் தெளிவும் தென்பட்டன. ஒருவேளை அவரது நெருங்கிய நம்பிக்கைக்குரிய நண்பராக இருந்த ரணிலுடன் (இப்போதும் நண்பர்தான் ஆனால் நம்பிக்கைக்குரிய நண்பராக இல்லாமலிருக்கக்கூடும்) ஏற்பட்ட அனுபவம் படிப்பினை காரணமாக இத்தனை வருடங்களுக்குப் பின்னர் காந்தி குல்லாயின் தேவையை சுமந்திரன் உணர்ந்திருக்கக்கூடும்.

காந்தியம் என்பது அமைதியல்ல. அமைதி என்பது நிசப்தத்தைக் குறிப்பது, குரல் எழுப்பாமையைக் குறிப்பது. வன்முறையைத் தவிர்ப்பது என்பது அமைதியல்ல. காந்தி ஒருபோதும் அமைதியைப் போதிக்கவில்லை. அவர் மக்களைப் போராடுங்கள் என்றுதான் அழைத்தார். வெள்ளையர்களுக்கு எதிராக கிளர்ந்தெழுங்கள் என்றுத்தான் முழக்கமிட்டார். சுதேசிப் போராட்டமாகட்டும் உப்புச் சத்தியாக்கிரமாகட்டும் அனைத்திலும் மக்களை ஒன்றுதிரண்டு எதிர்ப்பைக் காட்டும்படிதான் இந்திய மக்களிடம் காந்தி கேட்டாரே தவிர அமைதியாக இருந்துவிடும்படி அவர் கூறவில்லை.

அவர் போதித்தது எல்லாம் அரச வன்முறைக்குப் பதில் வன்முறை வேண்டாம் என்பதும் அரச வன்முறையைச் சகித்துக்கொள்ளும் பக்குவம் வேண்டும் என்பதும்தான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏவலாளிகளான பொலிஸார் தமது லத்திகள் ஓயும்வரை அடிக்க அடிக்க சகிப்புத் தன்மையோடு முன்னேறி அந்த அடிகளை வாங்கும் ஓர்மம் உள்ள அகிம்சைப் போராளிகள் காந்தியின் படையில் இருந்தார்கள். முன்னால் செல்பவர்கள் அடிவாங்கி கீழே விழும்போது அவர்களைத் தூக்கிச் செல்வதற்கும் மருந்திடுவதற்கும் அணிகள் தயாராக இருந்தன. கீழே விழுந்தவர்களின் இடத்தை நிரப்பி அடிகளைத் தங்கள் உடலிலே வாங்கிக் கொள்வதற்கு அடுத்தடுத்த வரிசையில் தொண்டர்கள் தயாராக இருந்தார்கள். காந்தி அதைத்தான் போதித்தார். வன்முறைக்குப் பதில் வன்முறையல்ல என்றாரே தவிர அவர் அமைதியாக இருங்கள் என்று சொன்னதில்லை. அரசவன்முறையைச் சகித்துக்கொண்டு சத்தியத்தை நம்பி போராடுங்கள் என்றார் காந்தி.

இன்று காந்தி குல்லாயை அணிந்து கொண்டு தன் பின்னால் அணிவகுத்திருக்கும் எத்தனை பேர் அத்தகைய போராட்டத்திற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதையும் சுமந்திரன் திரும்பிப் பார்க்கவேண்டும். காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை நடக்கும் பட்டினிப் போராட்டத்திற்கு இடையிலேயே தமக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்று கூறிக்கொண்டு தத்தமது வாகனங்களுக்குச் சென்று பிஸ்கட்டையோ பற்றீசையோ உண்டுவிட்டு வரும் அடுத்தமட்டத் தலைவர்களை வைத்துக்கொண்டு காந்திய வழியில் போராடுவோம் என்பது சரியாக வருமா என்பதைச் சுமந்திரன்தான் சிந்திக்க வேண்டும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது நேரு, பட்டேல் போன்ற பல தலைவர்கள் இருந்தபோதும் காந்தி மட்டுமே மக்களாலும் அவர்கூட இருந்த தலைவர்களாலும் மகாத்மா என்ற இடத்திற்கு உயர்த்தப்பட்டார். அதற்கு ஒரேயொரு காரணம், காந்தி எதைச் சொன்னாரோ அதைத்தானே முதலில் கடைப்பிடித்தார். காந்தியின் அறவழி அதுதான். அந்த வழியிலேயே தன் தொண்டர்களையும் பயணியுங்கள் என்றார். அது மிகக் கடினமான வழி, காந்தியைப் போன்று அவரது தொண்டர்கள் எல்லோராலும் அந்த வழியில் தொடர்ந்து நடக்கமுடியவில்லை. முக்கியமாக மற்றைய தலைவர்களால் அந்தக் கடின வழியைத் தொடர்ந்தும் முழுமூச்சில் முன்னெடுக்கமுடியவில்லை. அதனால்தான் காந்திக்குப் பின்னர் அந்தப் போராட்டத்தின் வலு குன்றிப் போனது.

75 ஆண்டுகளுக்குப் பின்னர் காந்தியின் குல்லாயை, தந்தை செல்வா அணிந்த அந்தக் குல்லாயை திரும்பத் தலையில் போடும் அதேநேரம் காந்தியின் போராட்டக் குணத்தையும் தான் சொன்னவற்றைத் தானே செயற்படுத்தும் நேர்மையையும் மனத்தில் இருத்தாமல் அந்த அறவழியில் நடக்க முடியாது என்பதையும் சுமந்திரன் மனதிருத்திக்கொள்ளவேண்டும். காந்தியின் அறவழியில் பயணிக்கும் தொண்டர் படையொன்றை இன்றைய இளைஞர்கள் மத்தியில் உருவாக்குவதற்கு அவர் உழைக்கவேண்டியது அதிகம் இருக்கும். அதற்கு முதலில் அவர் முற்றுமுழுதாக அரசியல் பணிக்குத் திரும்ப வேண்டியிருக்கும்.

சுமந்திரன் தனது பேச்சில் இன்னும் பல விடயங்களைச் சுட்டியிருக்கிறார். அது பற்றி நாளைக்குச் சொல்கின்றேன் வாசகர்களே....

- இடிமின்னல் -

## காந்திய வழியில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தனது உரையில் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

இன்று நாம் அடையாளமாக ஒரு காந்தி குல்லாவை அணிந்திருக்கின்றோம். அதற்குக் காரணம் இருக்கின்றது. 1952ஆம் ஆண்டு திருகோணமலையிலே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக் கொடியை ஏற்றுகின்றபோது தந்தை செல்வாவும் அவரோடு கூட இருந்த 250க்கும் மேற்பட்ட கட்சித் தொண்டர்களும் இந்த காந்தி குல்லாவை அணிந்துதான் கட்சிக் கொடியை ஏற்றினார்கள். இதனுடைய அடையாளம் இது ஓர் அகிம்சைப் போராட்டம் என்று அறிவிப்பது. இது காந்திய வழிப் போராட்டம்.

இன்றைக்கு நாம் ஒரு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றோம். நாங்கள் தொடர்ந்து போராடுவோம். அந்தப் போராட்டத்தின் அடையாளம் அகிம்சை வழி என்பதை உலகத்திற்கு உரத்துச் சொல்வதற்குத்தான் இந்த காந்தி குல்லாய். அகிம்சை வழியிலே தொடர்ந்து போராடுவோம். எங்களை நசுக்கிவிட முடியாது. எங்களுடைய மக்களைக் கொன்றொழித்துவிட முடியாது. எங்களுடைய நிலங்களை அபகரித்து எங்களை இங்கேயிருந்து துரத்திவிடமுடியாது. நாங்கள் போகமாட்டோம். இங்கேதான் வாழுவோம். இந்த நாட்டிலேதான் நாங்கள் ஆளுவோம். இதையொரு சூளுரையாக இலங்கை ஆட்சியாளர்களுக்கும் சர்வதேசத்திற்கும் சொல்லிவைக்க விரும்புகின்றோம்.

சர்வதேசத்துக்கு முக்கிய செய்தியை இந்தவேளையிலே நான் சொல்ல விரும்புகின்றேன். எந்தவிதத்திலாவது எங்களுடைய மக்களின் இந்த அடிப்படை அபிலாசைகளை ஏற்றுக்கொள்கிற வண்ணமான ஒரு அரசியல் தீர்வு வரும்போது அதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். நாங்கள் கடும்போக்குப் பிடிப்பவர்கள் அல்லர். சர்வதேச சாசனங்களில் ஒரு மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமையைத்தான் நாங்கள் கேட்கிறோமே தவிர வேறெதையும் நாங்கள் கேட்கவில்லை. இது எங்களுடைய பிறப்புரித்து. இதை எங்களிடத்திலே இருந்து எவரும் எடுத்துவிட முடியாது. இதை எங்களிடத்திலே இருந்து எடுத்தால் நாங்களே இல்லை என்றாகிவிடும். ஆகையினாலே சர்வதேசத்துக்கு நாங்கள் சொல்கிற செய்தி, எப்படியாகினும் நாங்கள் சொல்லுகிற அந்த ஆட்சிமுறை (சமஷ்டி) வருமாக இருந்தால், நாங்கள் ஏற்றுக்கொள்ளுவோம்.

அதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு அழைத்தபோது சென்றோம். இன்றைக்கும் நாம் தயார். ஒரு சமஷ்டிக் கட்டமைப்பிலான உச்ச கட்ட அதிகாரப் பகிர்வு முறை வடக்கு கிழக்கிலே ஏற்படுத்தப்படுவதற்கு நாங்கள் தயார். அதில் சேர்ந்து உழைக்கத் தயார். அது கொடுக்கப்படாமல் இருக்கிற ஒவ்வொரு கணமும் நாங்கள் போராடுவோம். நீங்கள் தரப்போகிறீர்கள் என்று பொறுத்திருக்கப் போவதில்லை. அதனால்தான் நாங்கள் பேச்சுக்குப் போன போதுகூட திரும்பத் திரும்பச் சொல்லியே சென்றோம். இந்தப் பேச்சு மூலம் ஏதாவது நடக்கும் என்று எங்களுக்கு நம்பிக்கையில்லை, ஆனால், நாங்கள் குழப்பினோம் என்று எவரும் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் செல்கிறோம் என்பதைக் கூறியே சென்றோம். முழுமையாகப் பேசினோம். சமஷ்டி முறையிலே இந்த ஆட்சியைச் செய்வதாக இருந்தால் என்ன செய்யவேண்டும் என்பதை எழுத்திலே கொடுத்தோம். இன்றைக்கு அரசமைப்பிலே இருக்கின்ற அதிகாரப் பகிர்வுகளை அமுல்படுத்துவதாக இருந்தால் என்ன செய்யவேண்டும் என்கிற 5 படிமுறைகளை நான் எழுத்திலே கொடுத்திருக்கின்றேன்.

சக்கர நாற்காலியிலே இருந்தபோதும் தந்தை செல்வா போன்று இருக்கின்ற எமது தலைவர் சம்பந்தன் அனைத்துக் கூட்டங்களுக்கும் வந்தார். கடைசிக் கூட்டம் தவிர அனைத்திற்கும் அவர் ஏன் வந்தார். ஒருதீர்வைக் கண்டுவிடவேண்டும் என்பதற்காகத்தான் வந்தார்.

நாம் இதற்கு முன்னர் ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்குப் போயிருக்கின்றோம். சர்வதேசமும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் தொடர்ச்சியாக நாம் அதனைச் செய்யத் தயாரில்லை. நாம் ஜனாதிபதி அழைத்த போது பேச்சுக்குச் சென்றோம். அடுத்ததாக அழைக்கிறபோதும் செல்லுவோம். நிலங்கள் விடுவிப்பு உள்ளிட்ட பல

காலைக்கதிர்
Kalaikkathir


'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799



# நகுலேஸ்வரருக்கு இன்று கொடி



யாழ்ப்பாணம், பெப். 05

கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவ பெருந் திருவிழா இன்றையதினம் காலை 9.35 முதல் 11.34 மணிக்குள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம் பெறவுள்ளது.

இந்த மகோற்சவத்தில் 16ஆம் திகதி மாலை திருக்கல்யாண உற்சவமும், மறுநாள் மாலை பெரிய சப்பறத்திருவிழாவும் 18ஆம் திகதி காலை இரதோற்சவமும் மாலை நான்கு ஜாம பூஜைகளுடன் மகா சிவராத்திரி உற்சவமும் மறுநாள் 19ஆம் திகதி காலை கண்டகி தீர்த்தத்தில் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. அன்றையதினம் மாலை கொடியிறக்கத்துடன் மகோற்சவம் நிறைவடையவுள்ளது.









காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பயனற்றதான உரை

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று சுதந்திரதினத்தில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உரை. காலி முகத் திடலில் இடம்பெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் உரையைத் தவிர்த்து, தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றுவார் என்றபோது இந்த எதிர்ப்பார்ப்பு இன்னும் பல மடங்காகியது. நாடு பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீளும் வழிதெரியாது திணறும் சந்தர்ப்பத்தில், அரசியல் தீர்வு ஒன்றை இந்த சுதந்திரதினத்திற்குள் அறிவிப்பேன் என்று ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் அவரது உரையை நாடும், உலகமும் கடுமையாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தன.

ஆனால், பதற்றத்துக்கு நடுவேயும் ஒரு கிளுகிளுப்பு என்பதைப்போல அவரது உரை அமர்ந்திருந்தது. பொருளாதாரப் பிரச்சினைக்கும் சரி அரசியல் பிரச்சினைக்கும் சரி தீர்வு காணப்படவேண்டும் என்று தெரிவிக்கும் அவரது உரை, அந்தத் தீர்வை எப்படி அடைவது என்று ஒரு வரியில்கூட சொல்லவில்லை.

ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலம்போன்று தான் உட்பட இதுவரை ஆட்சி செய்தவர்கள் அனைவரும் தவறு விட்டிருக்கின்றார்கள் என்பதை அவரது உரை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. நாட்டின் இன்றைய நிலைக்கு குறைவாகவோ கூடுதலாகவோ ஆட்சியாளர்கள் எல்லோரும்தான் காரணம் என்று ஏற்கிறார். அரசியல்வாதிகளில் பலர் மக்களுக்குச் சேவை செய்வதற்காக அல்லாமல் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையை உயர்த்திக்கொள்வதற்காகத்தான் அரசியலுக்கே வந்தார்கள் என்கிறார். மக்களும் தங்கள் சொந்த நலன்களுக்காகவும் அற்பத் தேவைகளுக்காகவும் அவற்றை நிறைவேற்றக்கூடியவர்களைத்தான் அரசியல்வாதிகளாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்று சாடினார். அதனால்தான் இலங்கையின் அரசியல் திசைமாறிப் போனது என்று சொன்னார்.

எல்லாம் சரி, அவர் சொல்வது அனைத்தும் உண்மை. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் இந்த நிலையில் இருந்து நாட்டை மாற்ற என்ன செய்வது? அதற்கு அவரது உரையில் எந்தப் பதிலும் இல்லை.

வலுவான புதிய பொருளாதாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான அடிப்படைப் பணிகளும், அடித்தளமும் தற்போது தயார்ப்படுத்தப்பட்டுள்ளன என்கிறார் அரச தலைவர், ஆனால் அதை எப்படி எப்போது செய்யப் போகிறார் என்று எந்தத் தகவலும் இல்லை. பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதைத் தவிர பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கை என்று அவர் குறிப்பிடும் எதுவும் உரையில் இல்லை.

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கனவே நியமித்துள்ளோம். அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின் படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

என்பதுதான் அரசியல் தீர்வு தொடர்பில் அவரது உரையில் உள்ள பகுதிகள்.

அந்த அமைச்சரவை உபகுழு இதுவரையில் என்ன செய்தது? அதன் முடிவுகள் எல்லாக் கட்சிகளுக்கும் தெரியப்படுத்தப்படும் என்றால் எப்போது? காலம் காலமாக இப்படித்தானே காலம் கடத்தப்பட்டு வந்திருக்கிறது. அப்படியிருக்கும்போது – இதில் அறிந்துகொள்ள புதிதாக என்ன இருக்கிறது?

இளைஞர்கள் கேட்ட ஒட்டுமொத்த மாற்றத்துக்கான (சிஸ்டம் சேஞ்ச்) பதிலாக அரசமைப்புத் திருத்தங்கள் வரும் என்றிருக்கிறார். மக்களால் நிராகரிக்கப்பட்ட அதே அரசியல்வாதிகளை நாடாளுமன்றத்தில் வைத்துக்கொண்டு அவர்களுக்கு எதிரான, அல்லது அவர்களை நிராகரிக்கக்கூடிய மாற்றங்களைக் கொண்டுவந்துவிடவா முடியும்?

ஆகமொதத்ததில் அரச தலைவரின் உரையில் உருப்படியாக எதுவும் இல்லை. இதற்கு அவர் இந்த உரையை ஆற்றாமலேயே இருந்திருக்கலாம்.

# தமிழ் மக்கள் முன்னணியும் நேற்று யாழ். செயலகம் முன்பாக போராட்டம்



பன்னாட்டுகுற்றவியல்நீதிமன்றவிசாரணை வேண்டும் என்கிற முழக்கத்துடன் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாக்கி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது.

ஒற்றையாட்சியையும் 13ஆவது திருத்தத்தையும் முற்றாக நிராகரிப்போம் என்ற தொனிப் பொருளுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் முன்பாகத் தொடங்கிய முன்னணியின் ஊர்வலம், யாழ். மாவட்ட செயலகத்தின் முன் நிறைவடைந்தது.

இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் தமது தலைகளில் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்ற விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் "வி வோன்ட் ஐசிசி நீதி" என்று ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்ட பட்டிகளை அணிந்திருந்தனர்.

சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இன்றையதினம் யாழ் மாவட்ட செயலகம் முன்பாக கறுப்புக்கொடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிங்கள மக்களே தங்களுடைய தலைவர்களால் கொண்டாடப்படுகின்ற சுதந்திர தினக் கொண்டாடங்களை புறக்கணித்துள்ள நிலையில் இன்று அதைப் பார்த்து சர்வதேசம் சிரிக்கும் என்பதை ரணில் விக்கிரமசிங்க விரைவில் விளங்கிக் கொள்வார் என்றார்.

சிங்கள மக்களே தங்களின் தலைவர்களை நம்பி ஏமாறுவதற்கு தயாரில்லை என்ற நிலைக்கு வந்துள்ளபோது தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முட்டாள் தமிழ் தலைவர்கள் அதனை விளங்கிக்கொள்ளாமல் நிபந்தனை இல்லாத ஆதரவை கொடுத்து நிராகரிக்கப்படுகின்ற தரப்புக்களுக்கு ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளனர் என்றும் கஜேந்திரகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வீதியில் இருந்து போராடி வருகின்ற நிலையில் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. எங்கே எமக்குச் சுதந்திரம்?" என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அமைப்பின் வடக்கு – கிழக்கு இணைப்பாளர் ம.சுகந்தினி கேள்வி எழுப்பினார். அவரும் இதே போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

சோரம்போனதமிழ்தலைமைகள் 13ஆவது திருத்ததை ஏற்று தமிழ் மக்களுக்கு துரோகம் செய்வதற்கு முயற்சிக்கின்றனர் என்றும் ம.சுகந்தினி குற்றம் சுமத்தியுள்ளார்.

அங்கு பேசிய முன்னணியின் பேச்சாளர் க.சுகாஸ் தெரிவித்ததாவது:

இன்றைய மக்கள் திரட்சியின் வெளிப்பாடுகள் சர்வதேசத்திற்கு பல செய்திகளைத் தெரிவித்துள்ளன. இலங்கையிலுள்ள சிங்களத் தலைவர்கள் தெரிவிக்கின்ற விடயங்கள் வேறு, தமிழ் தேசித்தின் அபிலாசைகள் வேறு, என்பது இன்று தெட்டத்தெளிவாகியுள்ளது.

தமிழ் தேசம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒற்றையாட்சிக்கு ஒட்டப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை தீர்வாக ஏற்பதற்கோ அல்லது தீர்வினுடைய ஆரம்பப்புள்ளியாகக்கூட கருதுவதற்கோ தயாரில்லை என்பதை இன்றைய எழுச்சி காட்டிநிற்கிறது.

சிங்கள தேசத்திடமும் சர்வதேச சக்திகளிடமும் தமிழ் மக்களின் நலன்களை அடகு வைத்த தரப்புக்களை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும் – என்றார்.

# மன்னாரிலும் போராட்டம்



இலங்கையின் 75 வது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சனிக்கிழமை மன்னார் மாவட்டத்திலும் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பதாகைகளைத் தாங்கியபடி நடந்தது.

அருட்தந்தையர்கள், இளைஞர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ் உணர்வாளர்கள் என பலரும் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு கைகளை சங்கிலியால் கட்டி, வாய் மற்றும் மூக்குகளை கறுப்பு துணிகளால் மூடியபடி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

75 ஆண்டுகளாகியும் எமது அடிப்படை உரிமை நசுக்கப்படுகிறது, சிங்களத்தின் சுதந்திர நாள் தமிழினத்தின் கரிநாள், பௌத்த தேசிய வாதமும் சிங்கள இனவாதமுமே எம்மை அடிமைப்படுத்துகின்றன போன்ற வாசகங்கள் பதாகைகளில் எழுதப்பட்டிருந்தன.

போராட்டத்தின் இறுதியில் கைகளில் பதாகைகளையும் கறுப்பு கொடிகளையும் ஏந்தியவாறு போராட்டகாரர்கள் மன்னார் பேருந்து நிலைய வளாகம் முழுவதும் ஊர்வலமாகச் சென்றனர்

# நெய்தல்
## கடற்கரை நகர்

## தங்குமிட திறப்பு விழா அழைப்பிதழ்




**இடம்: அம்மன் கோவில் வீதி,**
**நாவற்குழி, யாழ்ப்பாணம்.**
**காலம்: 05.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம்: பிற்பகல் 03.30 மணிக்கு**

நெய்தல் கடற்கரை நகரின் தங்குமிட திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

0777 27 68 18


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM PER CHARGE*
FAAST-F2T
80-85 KM PER CHARGE*
FREEDOM
70-75 KM PER CHARGE*
Rs.550,000/- Upwards
Available Colors :
conditions apply*
India's fastest growing EV brand
2 YEARS WARRANTY*
3 FREE SERVICE*
*Range varies from mode to mode selected.
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர்
Kalaikkathir

# திறப்புவிழா அழைப்பிதழ்




## உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை

.........................................................................................................

## தைப்பூச திருநாளில்!

**551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் புதிய முகவரியில்.
(யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாக)
காலை 08.30 மணியளவில் இடம்பெறவுள்ள
திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பனைசார் உற்பத்திப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- இயற்கை விவசாய மரக்கறிகள்
- இயற்கை விவசாய இடுபொருட்கள்
- வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள்
- இயற்கை உரங்கள்
- கைவினைப் பொருட்கள்
- மட்பாண்டம்
- பாதணிகள்
- உலர் உணவுப் பொருட்கள்
- கடல் உணவுப் பொருட்கள்
- இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள்
- ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
- சித்திரங்கள்

தொடர்புகளுக்கு - 0764438620

**உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சுதந்திரனத்திற்கு ஆதரவாகவும் யாழ்ப்பாணத்தில் நேற்று பவனி



இலங்கையின் சுதந்திரதினம் கரிநாள் என்று அறிவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை எதிர்ப்புப் போராட்டங்கள் இடம் பெற்ற அதேநேரத்தில் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் விதமாகவும் யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் பவனி உள்ளிட்ட சிறு ஊர் வலம் இடம்பெற்றது.

யாழ். சிவில் சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. பல டசின் கணக்கான மோட்டார் சைக்கிள்கள் இலங்கை யின் தேசியக் கொடிகளை ஏந்தியபடி முன்னாள் அணிவகுத்துவர அவர்களின் பின்னால் பல டசின் கணக்கான ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் தேசியக் கொடிகளைக் கைகளில் எந்தியவாறு நடந்து வந்தனர்.

பண்ணை சுற்றுவட்டத்தில் இருந்து தொடங் கிய இந்தச் சிறிய ஊர்வலம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கைச் சுற்றியபடி யாழ். நகரை ஒரு வட்ட வலம் வந்தனர். துரை யப்பா விளையாட்டரங்கிலேயே யாழ். மாவட்டத் திற்கான பிரதான சுதந்திரதின நிகழ்வுகள் இடம் பெற்றன.

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் மீதான குற்றப்பத்திரிகை தயார்

மின்சாரக் கட்டணத்தை அரசு அனுமதிக்கமாட்டேன் என்று எதிர்த்து நிற்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்கவை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான குற்றப் பத்திரிகை 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது என்று தெரிகின்றது.

மின் சக்தி மற்றும் எரிசக்தித் துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் இடையில் தொடர்ந்து முரண்பாடுகள் இருந்து வருகின்றது. இருவரும் ஒருவரை ஒருவர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஜானகவை பதவி விலக்குவதில் மின் சக்தி அமைச்சர் தீவிரமாக இருக்கிறார். ஆணைக்குழுக்கள் சுயாதீனமானவை என்பதால் அரசின் முடிவை நிராகரிக்கும் அதிகாரம் அவற்றுக்கு இருக்கின்றன. அந்த அடிப்படையில் மின் கட்டணத்தை மேலும் அதிகரிக்கும் அரசின் முடிவை ஏற் பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மறுத்து வருகின்றது.

இதனால் ஆணைக்குழுவின் தலைவரைப் பதவி நீக்கம் செய்து அரசின் முடிவை ஆணைக்குழு ஏற்கச் செய்யும் முயற்சியில் அமைச்சர் ஈடுபட்டுள்ளார். அதற்காகவே ஜானக்கவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை அவரால் தயார் செய்யப்பட்டுள்ளது. அது சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது. அங்கிருந்து திருத்தங்கள் கிடைத்ததும் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அந்தக் குற்றப்பத்திரிகைய மின்சக்தி அமைச்சர் முன்வைக்கவுள்ளார்.







# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 05th of febuary 2023

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## Read the following passage and Answer: the question that follows.



When we enter New York harbour, the first thing we see is the Statue of Liberty. What impresses us the most is its size and magnificence. Have you ever wondered how it came to be there ? The Statue of Liberty was a gift from the people of France to mark the one hundred year anniversary of American Independence. In 1869, sculptor Frederic Auguste Bartholdi began to plan his concept for the monument.

Bartholdi chose the look of classic Greek and Roman figures. He envisioned Liberty as a strong and proud figure, one who personified not only the majestic Greek goddesses of the past, but also the working men and women of the present. Finally, in 1884, the work was finished, and Liberty was packed into 214 crates and sent to New York city. Only one problem stood in the way. While the French had raised a lot of funds to build the statue, New York had not secured the funds to build its foundation. It was not until a New York newspaper implored people for donations that money became available. Finally, on 28th October 1886, Americans celebrated the unveiling of the Statue of Liberty.

1. Why was the Statue of Liberty given as a gift to America by France?
--------------------------------------------------------------------------------
2. What is the name of the sculptor of the monument 'the Statue of Liberty' ?
--------------------------------------------------------------------------------
3. What did the sculptor imagine the Statue of Liberty to be ?
--------------------------------------------------------------------------------
4. How many years did it take to unveil the Statue of liberty ?
--------------------------------------------------------------------------------
5. Trace the word from the passage which means the same as "imagined".
--------------------------------------------------------------------------------

## Read the following passage and Answer: the question that follows.

The culture of nuclear families is in fashion. Parents are often heard complaining about the difficulties in bringing up children these days. Too much of freedom in demand, too much independence; over night parties; excessive extravagance, splurging pocket money; no time for studies and family all this is a common cry of such families. Aren't parents, themselves, responsible for this pitiful state ? The basic need of a growing youth is the family, love, attention and bonding along with moral values. One should not forget that 'charity begins at home'.

Independence and individuality both need to be respected, in order to maintain the sanctity of family. Children, today are to be handled with tact in order to bridge the ever widening generation gap. Only the reasonable demands need to be fulfilled, as there are too many expenses to be met and top many social obligations to be taken care of by the parents. Our forefathers lived happily in joint families. Children loved to live with their cousins, learnt to adjust within means. There was perfect harmony between the generations. There never existed the concept of old-age homes. There was deep respect for the family elders and love, care and concern for the youngsters. Even the minor family differences were solved amicably.

1. Mention any two major common concerns of a nuclear family.
--------------------------------------------------------------------------------
2. Who, according to the passage, are responsible for them ?
--------------------------------------------------------------------------------
3. Explain the expression 'charity begins at home'.
--------------------------------------------------------------------------------
4. Describe the atmosphere in joint families.
--------------------------------------------------------------------------------
5. Which word in the passage means 'Holiness of life' ?
--------------------------------------------------------------------------------

"konwledge isn't free. You have to pay attention"

# Read the following passage and Answer: the question that follows.

An elderly carpenter was ready to retire. He told his employer of his plans to leave the house building business and live a more leisurely life with his family. He would miss the pay cheque, but he needed to retire. The employer was sorry to see his good worker go and asked if he could build just one more house as a personal favour. The carpenter said 'yes', but in time it was easy to see that his heart was not in his work. He resorted to shoddy workmanship and used inferior material. It was an unfortunate way to end his career.

When the carpenter finished his work, his employer handed over the key of the house to the carpenter— "This is your house, my gift to you."

What a shock! What a shame ! If he had only known he was building his own house, he would have done it all so differently! Now he had to live in a poorly built house. So it is with us. We build our lives, a day

at a time, often putting less than our best into the building. Then, with a shock, we realize we have to live in the house we have built. If we could do it over, we would do it much differently. But, you cannot go back. You are the carpenter, and every day you hammer a nail, place a board, or erect a wall. Someone once said, your attitude, and the choices you make today, help build the "house" you will live in tomorrow. Therefore, build wisely!

1. What did the carpenter tell his employer?

------------------------------------------------------------------------------------



2. What favour did his employer ask from the carpenter ?

------------------------------------------------------------------------------------

3. What surprise did the employer have for the carpenter ?

------------------------------------------------------------------------------------

4. Why was the surprise a'shame'for the carpenter?

------------------------------------------------------------------------------------

5. Which word in the first paragraph means the same as 'art of skill of a workman' ?

------------------------------------------------------------------------------------



Next to water, tea is the most commonly consumed beverage in the world. This is a good news because tea offers important health benefits. Its benefits were first discovered by the Chinese Emperor Shen Nung who declared that it gave one vigour of body, contentment of mind and determination of purpose. Today there is ample proof that tea in its many forms possesses a number of health benefits from supporting the immune, system to reducing the risk of cancer, to helping prevent tooth decay.

What makes tea such a healthy drink ? The star compounds are called catechins. Those are antioxidants , that help prevent cell damage by harmful molecules called free radicals.

Tea can be black, green and red and is derived from a warm-weather evergreen tree known as Camelia Sinensis. The more processing, tea leaves undergo, the darker they become. Green tea is the least processed tea. It is simply steamed quickly and offers the maximum healing powers because it isn't fermented. It also helps prevent tooth decay and aids weight loss.

1. The most commonly consumed beverage in the world is……………………………………………………………………

2. Benefits of tea were first discovered by……………………………………..


3. Tea turns out to be a healthy drink due to the presence of……………………………………………………………………

4. Green tea leaves offer maximum healing powers because it is……………………………………………………………………

5. The word to the last para which means the same as helps is……………………………………………………………………




# Charlie Chaplin's Granddaughter To Play A Villain In 'Avatar

James Cameron's 'Avatar: The Way of Water' has been on a box-office record-breaking spree ever since its theatrical release. The massively mounted film has grossed over a whopping $2.1 billion at the box office globally and is expected to surpass 'Titanic' in the near future to become the third highest grossing movie of all time. The Academy Award nominated film's splendid box office performance has paved the way for its next three sequels.

About its very next sequel tentatively titled 'Avatar 3', which was filmed along with 'Avatar 2', it was previously revealed that legendary actor comedian Charlie Chaplin's granddaughter Oona Chaplin was cast in it.

Recently, 'Avatar' producer Jon Landau has divulged further details (via Empire Magazine) about exactly what role Oona Chaplin would be playing in 'Avatar 3'. Her character is called Varang and is being described as the leader of Ash people, an aggressive, evil, and volcanic Na'vi tribe. So, in a way, Oona Chaplin's character seems to be one of the main antagonists in 'Avatar 3', if not the primary villain.

Oona Chaplin has earlier been a part of HBO's 'Game of Throne' series where she essayed the role of Talisa Maegyr, a healer on a battlefield. Besides 'Game of Thrones', she has played several roles in films and series including 'Quantum of Solace', 'The Devil's Double', 'Black Mirror', and most recently 'Treason', etc.

It has also been revealed that after 'Avatar 3, the next sequel 'Avatar 4' will feature a big time jump. Further, 'Avatar 5' will be the first 'Avatar' film in which some parts will also take place on Earth, which will be shown as an overpopulated, under-resourced, and hard-to-live planet. The Avatar sequels 'Avatar 3', 'Avatar 4', and 'Avatar 5' are slated to release in theatres in the years 2024, 2026, and 2028, respectively.

# மண்வாசனை எப்படி உருவாகிறது?



நீண்ட நாட்கள் வறட்சிக்குப் பின், திடீரென வறண்ட நிலத்தில் புது மழை பெய்யும்போது தோன்றும் மனம் மயக்கும் மண்வாசனையை (Sweet Smell of Soil) விரும்பாதவர்கள் யாரும் இருக்க முடியாது! சரி! அந்த வாசனையில் சில நிமிடங்கள் மெய் மறக்கும் நீங்கள், எப்போதாவது அது எப்படித் தோன்றுகிறது என்று நினைத்ததுண்டா? இந்தக் கேள்வி நம்மில் பலருக்குத் தோன்றி இருக்கும் .

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அறிவியலாளர்கள் இசபெல் ஜாய் பேர் (Isabel Joy Bear) மற்றும் ஆர்.ஜி. தாமஸ் (R.G. Thomas), வறட்சிக்குப் பின் வரும் புது மழையில் தோன்றும் மண் வாசனையைப் பற்றி ஆராய்ச்சி செய்தபோது, இந்த வாசனைக்குப் பெட்ரிக்கார் (Petrichor) எனப்பெயரிட்டனர். மண்வாசனை, மூன்று விதமான காரணங்களால் உருவாகிறது.

வறட்சிக் காலங்களில் சில தாவரங்கள், வறண்ட நிலத்தில் விதைகள் முளைத்து வீணாவதைத் தடுக்க, ஒரு விதமான எண்ணெயை வெளிவிடுகின்றன. மண்ணிலும், பாறைகளிலும் ஊறிக் கலந்து இருக்கும் இந்த எண்ணெய், மழை பெய்யும்போது, பலகூட்டுப் பொருட்களுடன் சேர்ந்து, காற்றில் கலந்து மணம்



வீசுகிறது.

ஈரமான, வனப்பகுதிகளில், மண்ணில் வாழும் ஆக்டினோமைசேட்டிஸ் (Actinomycetes) எனும் ஒரு வகையான பாக்டீரியா, விதை மூலங்களை (Spores) வெளியிடும்போது, ஜியோஸ்மின் (Geosmin) எனப்படும் வேதிக்கூட்டுப் பொருளை சுரக்கின்றன. இந்தக் கூட்டு பொருள், மழை நீர் நிலத்தில் விழும் போது மண்ணிலிருந்து வெளிப்பட்டு, ஈரக்காற்றில் கலந்து மணம் வீசுகிறது.

இடி, மின்னலில் வெளியாகும் மின்னூட்டம் பெற்ற துகள்கள் வளிமண்டலத்தில் இருக்கும் ஒக்சிஜன் மற்றும் நைட்ரஜன் மூலக்கூறுகளிடையே வேதிவினையைத் தூண்டி, நைட்ரிக் ஒக்சைடை (NO) உருவாக்குகின்றன. இது வளிமண்டலத்தில் இருக்கும் வேதிப்பொருட்களுடன் வினைபுரிந்து ஓசோன் (Ozone – O3) வாயுவை உருவாக்குகிறது. மழைக் காற்றுடன் கலந்து வரும் இந்த ஓசோன் வாயு, குளோரினின் மணத்தை நினைவூட்டக் கூடியது. எங்கிருந்தோ வரும் மழைக் காற்றில் கலந்து வரும் இந்த வாயுவினால் தான், மழை வருவதற்கு முன்பே, மழை மணத்தை நம்மால் உணரமுடிகிறது.

# சொற்களின் வகைகள்

## கல்விக்கதிர்

- அகரன் -

வழக்கு நிலை அடிப்படையில் சொற்கள் ஐந்து வகைப்படும்.

1. இயற்சொல்
2. திரிசொல்
3. வடசொல்
4. திசைச்சொல்
5. இயற்சொல்

இயல்பாக பொருள் அறியத்தக்க வகையில் வழங்கப்படும் தமிழ்ச் சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.

அதாவது இது படித்தோரும், பாமரரும் விளங்க கூடிய வகையில் அமையும்.

இது நான்கு வகைப்படும்.

1. பெயர் இயற்சொல்
2. வினை இயற்சொல்
3. இடை இயற்சொல்
4. உரி இயற்சொல்

உதாரணம்

பெயர் இயற்சொல் - மண், மரம், பொன்

வினை இயற்சொல் - நடந்தாள், சாப்பிட்டாள் , ஓடினாள்

இடை இயற்சொல் - பின், ஐ, ஆல், இனி, முன்

உரி இயற்சொல் - அழகு , அன்பு

திரிசொல்

செய்யுளிலே மட்டும் வழங்குவனவாயும் , இடம் நோக்கி பொருள் அறிந்து கொள்ள வேண்டியவனாகவும் உள்ள சொற்கள் திரி சொற்கள் எனப்படும்.

இது கற்றவர்களுக்கு மாத்திரம் விளங்கும்.

இது இரண்டு வகைப்படும்.

1. ஒரு பொருள் குறித்த பல சொல்
2. பல பொருள் குறித்த ஒரு சொல்

**ஒரு பொருள் குறித்த பல சொல்**

**பெயர் திரிசொல்**

அரசன் - கொற்றவன், வேந்தன், மன்னன், ராஜா, கோ , கோன்

அமைச்சன் - மந்திரர், சூழ்வோர், நூலோர் , மந்திரிமார்

**வினை திரிசொல்**

அணிதல் - சூடுதல் , தரித்தல் , புனைதல், மிலைதல், பூணல்

சொன்னான் - செப்பினான், கழறினான், மொழிந்தான், கிளர்ந்தான்

**இடை திரிசொல்**

கொல் - ஐயம் , அசைநிலை

ஓ - அசைநிலை , பிரிநிலை , ஐயம், தெரிநிலை

**உரி திரிசொல்**

அழகு - அணி , வடிவு , வனப்பு , பொலிவு , எழில்

மிகுதி - சால , உறு , தவ , நனி , கூர், கழி

**பல பொருள் குறித்த ஒரு சொல்**

**பெயர் திரிசொல்**

உயிர், பேய், மெல்லிய புகை - ஆவி

கடல், சக்கரம், வட்டம் , சில்லு - ஆழி

**வினை திரிசொல்**

எறி , சிதறு , பரவச்செய் , ஆட்டு - வீசு

நீங்கினான், கொண் டான், நிர்நயித்தான் - வரைந்தான்

**இடை திரிசொல்**

இசை நிலை, வினா, எண், இருமாப்பு - ஏ

என்னுடைய, என்னஎன்றுஉவமை உருபு - என

**உரி திரிசொல்**


கூர்மை , காப்பு , அச்சம் , விளக்கம் - கடி

**வடசொல்**

தமிழோடு கலந்த வடமொழிச் சொற்கள் வடசொல் எனப்படும்.

வடசொல் இரண்டு வகைப்படும்.

1. தற்சமம்



2. தற்பவம்

**தற்சமம்**

ஒலி மாறுபாடின்றி தமிழில் வழங்கும் வடமொழிச் சொல் தற்சமம் எனப்படும்.

வடமொழிக்கும் , தமிழ்மொழிக்கும் பொதுவான சொற்களாக இவை கருதப்படுகின்றது.

உதாரணம்

கமலம்

குங்குமம்

காரணம்

அமலம்

தற்பவம்

தமிழிலே திரிவடைந்து வரும் வடமொழிச் சொல் தற்பவம் எனப்படும்.

சில வடமொழி சொற்கள், தமிழ் மொழி மரபுக்கேற்ப விகாரம் பெற்று வருமாயின் அவை தற்பவம் எனப்படும்.

உதாரணம்

வடமொழி - ஜலம்
தமிழ் மொழி - சலம்
வடமொழி - ஹனுமான்
தமிழ் மொழி - அனுமான்
வடமொழி - ஹரி
தமிழ் மொழி - அரி
வடமொழி - தசரதன்
தமிழ் மொழி - தயரதன்
வடமொழி - கிருஷ்ணர்
தமிழ் மொழி - கிருட்ணர்
வடமொழி - ராஜன்
தமிழ் மொழி - அரசன்

**திசைச்சொல்**

வடமொழி அல்லாத அயல்மொழிகளிலிருந்து தமிழில் கலந்த சொற்கள் திசைச் சொல் எனப்படும்.

**கிரேக்க மொழிச் சொல்**

ஓரை - நேரம்
கண்ணல் - கடிகாரம்
சுருங்கை - வான்கதவு
யவனம் - விரைவு

**அரபு மொழிச் சொல்**

தகவல்
வசூல்
இமாம் - இஸ்லாமிய சமய தலைவர்
இலாகா - திணைக்களம்

**பாரசீக மொழிச் சொல் - ஈரான் மொழிச் சொல்**

சுமார்
துப்பாக்கி - சர்க்கார்
சால்வை
சிப்பந்தி - காவற்படை

**உருது மொழிச் சொல் - பாகிஸ்தான் மொழிச்சொல்**

அத்தர்
அண்டா
ஆசாமி
இறாத்தல்
ஊதுபத்தி
கசாப்பு
காலி
கப்பி
கெடுபிடி
குத்தகை
சாமான்
இணாம் - இலவசம்
சந்தா - அங்கத்துவ கட்டணம்
அசல் - உண்மை

**தெலுங்கு மொழிச் சொல்**

இடாப்பு
இரவிக்கை
இராணுவம்
இலஞ்சம்
ஒயில்
கபோதி
சந்தடி
விருது

**கன்னட மொழிச் சொல்**

சமாளித்தல்
அட்டிகை
சொத்து

**மலையாள மொழிச் சொல்**

கொச்சி
தளபாடம்


**மராத்தி மொழிச் சொல்**

அட்டவணை
அபாண்டம்
கைலாகு
குண்டான்
சாம்பார்
போத்துக்கேய மொழிச் சொல்
அலுமாரி
அலவாங்கு
அன்னாசி
கடதாசி
கதிரை
கோப்பை

**ஒல்லாந்து மொழிச்சொல்**

சாக்கு

# அன்பிற்கு உண்டோ அடைக்கும் தாழ்



மல்லிகா அவள் தாய் மெலிதான சிவந்தவள். தந்தை சொக்கன் அதேபோன்றவன்.

இவர்கள் இருவரின் உறவினர்கள் கூட கருமையானவர்கள் இல்லை. ஆனால் எப்படி சிந்தனா மட்டும் இவ்வளவு கருமையானாள்? இவளின் துருதுருப்பு சாதுரியமெல்லாம் இவளை மற்றவர்கள் வியந்து பார்க்கும் விதமாகவே இருக்கும். ஆனாலும் அவள் திறன்களை விட கருமையைப் பற்றித்தான்எல்லோரும் பேசிக் கொள்வர்.

ஆசை அறுபது மோகம் முப்பது கடந்து போதைப் பானங்களில் மூழ்கி இன்பம் கண்டு கொண்டிருந்தான் சொக்கன். காதல் திருமணத்தின் பரிசு கறுப்பி சிந்தனா. இவள் நடக்கும்போது ஒருவித ஆண்தன்மை வேகம், பேசும்போதும் அதே தடித்த ஒலி ஒருவித மிடுக்கான அழகு அவள். சொக்கன் சகோதரர்களுக்கு சிந்தனாவின் வயதில் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் இவளை தொட்டால் ஒட்டிவிடும் என்பது போன்று காணமுன் கறுப்பிவாரா என முகம் சுழிப்பது குழந்தை பருவத்திலேயே ஆரம்பமானது. சொக்கனின் மனைவி மல்லிகா வின் பெற்றோர் சாதி குறைந்தவர்கள் மல்லிகா பார்க்க பெண்மைகு இலக்கண மாணவள் ஆனாலும் அவளுக்கு காதல் நேசம் நீண்டுகை தரவில்லை எப்படியாவது சொக்கனையும் மல்லிகாவையும் பிரித்துப் போட வேண்டும் என்று கங்கணம் கட்டி வெற்றி கண்டவர் ரத்தினம் மாமி.

இப்போ மல்லிகா தனிச்சு தன் தாய் வீட்டில் இருந்தாள் அவளுக்கு 28 வயது பதினாறு வயதில் திருமணம் செய்து கொண்டவள் அவள். மகளும் தாயும் போனால் சகோதரமோ? என்பார்கள். ஊர்விடுமா வாழ மல்லிகா வேலைக்கு போய் தன் பிள்ளையை பாராமரித்தாள். மகள் பெரியவளாகப் போறாள் தன் வாழ்வு தான் போச்சு மகள் வாழ்வை எண்ணி கூலிக்கு அங்கங்கே வேலைக்கு போய் வீடு வீடா சமையல், கடைகளில் சமையல் என அஞ்சப்பத்ததேடி அண்டண்டைக்கு காலம் கழித்து இருந்தாள் மல்லிகா.

சொக்கனுக்கு சொந்த புத்தி இல்லை ரத்தினம் அவனுக்கு புது பொண்ணு தேடிட்டு இருந்தாள். அவள் விருப்பம் எதுவும் நடக்கவில்லை. புதுசு புதுசா போதைக் குளியல்ல அவன் காணாமல் போய்க்கொண்டிருந்தான். சொக்கன் மல்லிகா இருவரும் வேறு வேறு ஊரைச் சேர்ந்தவர்கள். மீண்டும் சந்திப்பதற்கு வாய்ப்புக்கள் இல்லை.

இவள் கூலிக்கு அவன் குடிக்கு என தேடிக் கொண்டே காலம் ஓடியது. சிந்தனா 12 வயதில் பெரியவள் ஆனாள் அங்கங்கே குறுணியா சேர்த்து வைத்த பணத்தில் கண்ட தண்ணிய ஊத்தி துடக்கக்கழிச்சு பத்து நாள்ல பள்ளிக்கு அனுப்பி வைத்தாள் மல்லிகா. சிந்தனாவுக்கு தன்னை கறுப்பு என்று யார் சொன்னாலும் கோபம் வரும் இன்றைக்கு அம்மம்மா இவளை பார்த்து பாரு இவள அந்த ரத்தினத்தை போல என்று சத்தம் வச்சாள் அவளால பொறுக்க முடியல! அப்பா அம்மா பிரிவு அவளது மனசுல பேர்இடியாக மறைந்து கிடந்தது. தன்னை எல்லாரும் சுமை

இருந்தாள்.

மல்லிகாவுக்கு 28 வயது. வாழவேண்டிய வயதுல கசாதும் வைக்காமல் தாலிய கட்டி புள்ளைய பெத்துட்டு மூலைக்க இருக்காள் என்று அவளுக்கு புதுவரன் தேடிக் கொண்டிருந்தார்கள். அவளுக்கு அதுல விருப்பமில்லை. அவள் சிந்தனாவை பார்த்துக்கொள்ள கூலிக்காரியாக ஓடிக்கொண்டே இருந்தாள்.

காலம் மாற மனசு மாற வெளிநாட்டு சம்பந்தம் எப்படியோ சம்மதிக்க வைத்து அவளை வெளி நாட்டுக்கு இரண்டாம் தாரமாக தாரை வார்த்துக் கொடுத்துவிட்டாள் மல்லிகாவின் அம்மா.

சிந்தனாவின் சின்ன மனசுக்கு சிலுவைகள் பல இடி இடியாய் ஏற்றப்பட்டன. இப்போ சிந்தனாவை விடுதியில் விடவேண்டும். விடு முறைக்கு பட்டணத்தில் புஷ்பன் மாமா வீட்ட தங்கிக்கலாம் .

அம்மா அப்பா இருந்தும் யாருமில்லா உணர்வு!!

நான் கறுப்பு!!

ஆம்புள மாதிரி நடக்கிறன்!!

குரல் வேற சரியில்லை!!

என தன்னைத்தான் தாழ்த்திக் கொண்டு பட்டியல் படுத்திக் கொண்டாள் சிந்தனா. விடுதி வாழ்க்கை கடந்து கொண்டிருந்தது.

அவளை கறுப்பு என்று யார் சொன்னாலும் ஆழ யோசித்து தன்னைத்தான் குறைத்துக் கொள்வாள் சிந்தனா. விடுமுறைக்கு மாமா விட்ட போனா அவங்க பிள்ளைகள் இவள எச்சில் போல பார்ப்பாங்க இவளுக்கு சாப்பிட தனிக்கோப்பை குடிக்க தனி சில்வர், படுக்க தனிப் பாய், மாதவிலக்கு நேரங்களில் விறாந்தையின் வெளியில் தான் இருப்பு உறக்கம் எல்லாம். சிந்தனா தனக்குள்ளே அடக்கி அடக்கி தனிமையின் எல்லைக்கே வந்திருந்தாள். கல்லூரி படிப்பு எல்லாம் அவளுக்கு தூரம் ஆகின்றது.

புத்தகங்கள் பாரமாகின்றது. ஏதோ சுமக்க வேண்டும் என சுமந்து விடுதிக்கு போய்விடலாம் என நடந்தாள்.

விடுமுறைகளும் விடுதியில் கழிக்கின்றது அவளுக்கு.

அன்று விடுதி சுத்தம் செய்து மீள்திருத்தம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன.

மாணவர்களை வீட்டுக்கு அனுப்ப உத்தரவுவழுங்கப்பட்டது. சிந்தனாவுக்கு மாமா வீட்டுச்சிறைக்குப் போக சற்றும் விருப்பமில்லை.

நான் ஏன் கறுப்பு?





என் நடை ஏன் இப்படி?

என் குரலுக்கு என்ன?

அம்மா அப்பா யாரும் என்னை போல் இல்லையே?

அதனாலா என்னை தனியா விட்டுவிட்டாங்க?

பட்டியல் படுத்திக் கொண்டாள். எல்லாரும் தங்கள் தங்கள் பைகளுடன் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு விடுதி திருத்தத்திற்காக ஒத்துழைத்தனர். மாணவர்கள் விடுமுறைக்கு வீட்டுக்கு

## சிறுகதை

செல்லும் ஆனந்தத்தில் கல கலத்து பறந்தனர். சிந்தனா இறுகியவளாய் வீதி மண்ணுக்கு நோகுமென ஒற்றி ஒற்றி நடந்தாள். மாமா வீடு புகையிரத கடவைக்கு அந்த புறம். மாமா மகள் கத்துகி றாள் இவளை கண்டதும் அங்க பார் கறுப்பி ஆபிரிக்காக்காரி வீட்ட வரப்போறாள் கிண்டல் பண்ணி கடந்து சென்றனர்.

சிந்தனாவுக்கோ என்ன செய்வது தெரியவில்லை.

தண்டவாளம் கடக்க மாமா வீடு வந்துவிடும் பாதம் நடக்க ஒத்துழைக்கவில்லை கண்கள் அருவியாக பெருக் கெடுக்கின்றது. அவள் அவலக் குரல் யாருக்கும்கேட்கா தபடி அந்த புகையிரதம் வந்து கொண்டிருந்தது இத்தனை கூச்சலிட்டு வரும் அந்த கோச்சு வண்டி சத்தம் அவள் காதுகளுக்கு கேட்காதபடி சிந்தனை அதை நிரப்பியிருந்தது இவள் பாதம் தண்டவாளங்களில் ஏறிக்கொள் கின்றதுபுகையிரதமும் வேகமாக அண்மித்துக் கொண் டிருந்தது அவள் உறைந்த உணர்வுகள் அவளுடன் ஆமைநகர்வாகிக் கொண்டிருந்தது . மாமாவின் பிள் ளைகள் சிந்தனா எனஅலப்பாரித்தனர். அவள் பின்னே ஓடிவந்த அந்த நாய்க்குட்டியை மோதி ஓடும் குருதியையும் அள்ளித் தெளித்தபடி கடந்து போனது அந்த புகையிரதம். இப்போ ஆபிரிக்காகாரி கறுப்பி சிந்தனாவின் பக்கம் மூச்சிரைத்து ஓடிவந்த மாமா பிள்ளைகள் நேஞ்சில் கை வைத்து அப் பாடா உங்களுக்கு ஒண்ணுமில்லயே பாத்து வரக்கூடாதா என்று அவளை அணைத்துக் பதறினர். இனம் தெரியாத மகிழ்வு சிந்தனா.

இவர்களா ? சற்றுமுன் கேலிசெய்தார்கள் சீச்சீ இருக் காது என தன்னைத் தேற்றிக் கொண்டாள். குழந்தைகள் கெட்டதையா? இல்லை கேட்டதைத் தானே பேசுகிறார்கள். நடந்தவை மாமாவீட்டில் கண்ணீரோடு ஒப்புவிக்கப் பட்டது .மூத்தவள் தன் தட்டில் உணவைப் பரிமாறி சிந்தனாவிடம் நீட்டினாள். உயிர் உடலிலும் உணர்விலும் மீண்டுவந்தது அவள் ஆனந்தம் கலந்து நிறைந்த கண்களில் தெரிந்தது.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# சொர்க்கத்தின் திறவு கோல்


ஏகாந்தம் செறிந்திருந்த
ஓர் அத்துவானக்காட்டிலே
கையிலே
தூணியின் கடைசி அம்புடன்
என் வேட்டையின் தருணம்
உயிர் வதை பற்றி
தீவிரமாய் நான்
சிந்தித்துக் கொண்டிருந்த
கணத்திலே
எல்லா அம்புகளுமே
தத்தம் போக்கிலே தாமாகவே
சிறகு பூட்டி
பறந்து போயிருந்தன
போர்களத்திலே
தளபதியை கடைசிவரை
விட்டுப் பிரியா
விசுவாசம் மிக்க மெய்க்காவலன்
போல
இந்த ஒற்றை அம்பு மட்டும்
என்னுடனே
வதை பற்றிய வாதப்
பிரதிவாதம்
வலுவிழந்து போக
பற்றைகளிருந்தெழும்
அரவங்களில்
மனம் மையமிடத்
தொடங்கியது
எங்கிருந்தும் நான்
தாக்கப்படலாம்
எந்த நிமிடத்திலும்.
அலறிக் கொண்டு சடுதியான
பாய்ச்சலாக
சத்தமிடாத முற்றுகையாக
மரங்களிலிருந்து நேரே
என் கழுத்து முறிய விழுவதாக
மரணத்தின் வடிவம் குறித்து
கற்பனைக்குள்
பாய்ந்தது மனது
தூரமாய்க் கேட்கும்
ராக்குருவியின் சோகப்பாடலில்
உருகிக் கண்மூடிய ஒரு
நொடிக்குள்
எதுவென்று தெரியவில்லை
என்மீது பாய்ந்தது
இலக்கற்றுச் சென்ற
என் கடைசி அம்பு
கடைசியில்
இராக்குருவியில் குத்திட்டு
நின்றது
பறவைகளாய் மாறிப்போன
அம்புகள்
என் உடலத்தைத்தூக்கிச் செல்ல
விழுதுகளுடன் வருகையிலே
பேசிக்கொண்டதை
என் ஆன்மா கேட்டது
’ வேட்டையென்று வந்த பின்
வதை பற்றிச் சிந்தனை எதற்கு?’
நொந்துபோன ஆன்மாவை
மிருதுவாய் தடவிக் கொண்டு
யாரோ அழைத்துச் சென்றதாய்
உணர
நிமிர்ந்து பார்த்தேன்
தேவ தூதர்களின் சிறகுகளோடு
ராக்குருவி

**-திருக்கோவில் கவியுவன்-**

# கனவுக் கதிர்



# நளதமயந்தி காதல் கதை



(சென்றவார தொடர்ச்சி)

காட்டுக்குச் சென்ற 2 பேருக்கும் சரியான சாப்பாடு இல்லாமல் சோர்ந்து போய் விட்டனர். இந்த நிலையில் கிட்டத்தட்ட மயங்கிய நிலையில் நின்றாள்.

உடனே நளன் தமயந்தியிடம் அவளை தந்தை வீட்டுக்கு செல் என்று கூற அவள் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டாள். இதனால் நளன் தமயந்தி தூக்கத்தில் இருக்கும் போது அவளை அங்கேயே விட்டுவிட்டு தான் மட்டும் எழுந்து நடந்து சென்றான்.அவன் அவ்வாறு எழுந்து சென்றதற்கு காரணம் என்னவென்றால், தமயந்தி நான் போய்விட்டால் தனியாகக் காட்டில் கஷ்டப்படாமல் அவளது தந்தை வீட்டுக்கு சென்று விடுவாள் என்ற எண்ணத்தில் ஆகும்.

தமயந்தி கண்விழித்து பார்க்கையில் அவளைச் சுற்றி ஒரு மலைப்பாம்பு இருந்தது அவள் பயந்து ஓடுகையில் ஒரு வேடன் அவளைக் காப்பாற்றினான்.

அவனுக்கு தமயந்தி ஆசை ஏற்பட அவனும் அவளை துரத்தினான். இதனால் தப்பித்து இன்னொரு நாட்டுக்குப் போய் வேஷம் போட்டுக்கிட்டு பணிப்பெண்ணாக வாழ ஆரம்பித்தாள் தமயந்தி . அதே இடத்துக்கு விருந்துக்கு வந்த அவளின் தந்தை அவளை வலுக்கட்டாயப்படுத்தி தன்னுடைய இடத்துக்கு கூட்டி சென்றார். இப்போது தமயந்தி நளன் நினைத்தபடியே அவளது அப்பா வீட்டில் குழந்தைகளுடன் அடைக்கலமாக இருக்கிறாள். தமயந்தியை பிரிந்து சென்றபின் நளனுக்கு என்ன நடந்தது ? ஒரு அடர்த்தியான காடு வழியே நடந்து கொண்டிருக்கும் போது என்னை காப்பாத்துங்க காப்பாத்துங்க தேனும் ஒரு குரல் அவருக்குக் கேட்டது. அந்தக் குரல் வந்த திசையை நோக்கிப் பார்க்கும் போது அங்கு நிறைய மரங்கள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தன. அதில் எரிந்துகொண்டிருந்த கார்க்கோடகன் எனும் பாம்பே அவ்வாறு கத்தியது. உடனே நளன் அந்தப் பாம்பை காப்பாற்றினான். அந்தப் பாம்பு நலனுக்கு உதவும் நிமித்தமாக உருவம் மாறும் பொருட்டு அவனை கொத்தியது இதனால் நளன் கூன் விழுந்த கிழவனின் உருவம் பெற்றான். மேலும் கார்கோடகன், உனது அழகான உருவம் எப்போது வேண்டும் என்று நினைக்கிறாயோ அப்போது இந்த உடையை போடு என்று கூறி ஒரு உடையை கொடுத்தான்.

அதை எடுத்துக்கொண்டு அயோத்தி நாட்டுக்குச் சென்றான். அங்கு ஓர் அரசனுக்கு தேரோட்டியாக இருந்தார். நளனுக்கு மிகவும் வேகமாக தேர் ஓட்ட தெரியும் அந்த வித்தையை மன்னனுக்கு கற்றுக்கொடுக்க மன்னனும்,ஒரு மரத்தில் இருக்கும் இலைகளை எவ்வளவு வேகமா என்கிற வித்தையை நளனுக்கு சொல்லிக் கொடுத்தான்.

ஒரு நாட்டினுடைய மன்னனாய் இருந்த நளன் இப்போது இன்னொரு நாட்டுடைய மன்னனுக்கு தேரோட்டியாக வாழ்ந்து வருகிறான். மறுபக்கம் தமயந்தி அவளது தந்தையின் அடைக்கலத்தில் வாழ்ந்து வருகிறாள் இவ்வாறாக 12 வருடங்கள் முடிந்தன .

இந்த சமயத்தில் தமயந்திக்கு ஒரு சந்தேகம் வருகிறது. நளன் எங்கேயாவது இருக்கவேண்டும் அதனால் நளனை எப்படியாவது என்னைத் தேடி வர வைக்க வேண்டும் என்பதற்காக தனது தந்தையிடம் சொல்லி சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்கிறாள்.

அவள் நினைத்தபடியே அச் சுயம்வரத்திற்கு அயோத்தி


## இலக்கிய நயம்

மன்னனின்தேரோட்டியாக நளன் வந்தான். நளனுடைய பாதம் அந்த இடத்தில் பட்ட உடனேயே தமயந்தியின் உள்ளுணர்வு ஏதோ சொல்ல அவளின் கண்கள் நளனைத் தேடியது.


இப்போது சுயம்வரம் நடக்க ஆரம்பிக்கிறது . எல்லா மன்னர்களும் வந்து அமர்ந்து இருக்கிறார்கள், அந்த நாள் அன்றுதான் சனிபகவான் நளனை பிடித்து ஏழரை ஆண்டுகள் முடிவடைந்தது. இவ்வளவு தொந்தரவு கொடுத்தும் நேர்மையாக இருக்கும் நளனை பார்த்து மனம் இரங்கி சனி பகவான் அந்த இடத்திலிருந்து விலகி போகிறார் .தமயந்திக்கு சுயம்வரம் நடக்கும் காட்சியை பார்த்த நளன், உடனே கார்கோடகன் கொடுத்த அந்த உடையை அணிந்து மீண்டும் அழகிய உருவம் பெற்றான். ஏற்கனவே உள்ளுணர்வில் நளன் இங்கு இருக்கிறான் என நினைத்திருந்த தமயந்தி இப்போது முழுமையான உருவத்தில் இருந்த நளனுக்கு மாலை சூட்டி மறுபடியும் இரண்டு பேரும் சேர்ந்தனர்.

இந்த திருமணத்திற்கு பிறகு தமயந்தியின் தந்தையான பீமன் நளனிடம் உனக்கு என்ன சீர்வரிசை வேண்டும் என்று கேட்க, அதற்கு நளன் உங்களின் படைகளை கொடுங்க நான் எனது நாட்டை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்றான். பீமனும் நளன் கேட்ட படைகளை கொடுக்க, தனது நெடுத நாட்டில் கொடூரமாக ஆட்சி புரிந்து கொண்டிருக்கும் புட்கரனை தோற்கடித்து மறுபடியும் தன்னுடைய நாட்டை கைபற்றி தன்னுடைய மக்களை செங்கோல் ஆட்சிபுரிய ஆரம்பித்தான் நளன். அனைத்து துன்பங்களும் நீங்கியதால் நளனும், தமயந்தியும் கோயிலுக்குச் சென்று வழிபடும் போது அவளுக்கு காட்சியளித்த சனி பகவான், என்னை நீங்கள் இரண்டு பேரும் மன்னிக்கணும். நான் உங்களுக்கு கொடுத்த துன்பம் தவறு உங்களுக்கு ஏதாவது ஒரு வரம் ஒன்று தர விரும்புகிறேன்.

கேளுங்கள் என்று கூற அதற்கு நளன் தனக்காக எதுவும் கேட்காமல் நான் பட்ட கஷ்டத்தை இந்த உலகத்தில் யாருமே படக்கூடாது. நாடிழந்து, வீட்டிழந்து,அடையாளம் இழந்து எந்த மனிதனும் சுற்றி திரியக்கூடாது. என்னுடைய மனைவி பட்ட கஷ்டத்தை எந்த ஒரு பெண்ணும் படக்கூடாது. தனது கணவனைப் பிரிந்து அம்மா அப்பா வீட்டுக்கு போய் வாழும் ஒரு நிலைமை ஒரு பெண்ணுக்கும் வரவே கூடாது. அதனால் இந்த நளதமயந்தி கதையை யாரெல்லாம் கேட்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உங்களுடைய




பாதிப்பிலிருந்து நீங்கள் விடுவிப்பு கொடுக்க வேண்டும் என கேட்டானாம் என்ற நம்பிக்கை உண்டு. இந்த நம்பிக்கை உண்மையா பொய்யா என்று தெரியாது ஆனால் இந்த கதையில் வருவதுபோல நாடிழந்து, வீட்டிழந்து , அடையாளம் இழந்து திரிபவர்களுக்கு கூடிய விரைவில் நல்லவாழ்க்கை அமைய வேண்டும் .



**குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்**



# அதிசயக்குதிரை

கிருஷ்ண தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. குதிரைப்படையும் வலிமையுள்ளதாக இருந்தது. சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரிகளில் ஒருவர் ஒரு யோசனை சொன்னார்.

அதாவது ஒரு வீட்டிற்கு ஒரு குதிரையையும் அதற்குத் தீனி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப் பட்டு வந்தது. அத்தொகையைப் பெற்றுக் கொண்டு குதிரையை நன்கு ஊட்டளித்து வளர்த்தனர். அதே போல் தெனாலிராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப்பட்டது.



ஆனால் தெனாலிராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்து புல் போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய தூவாரம்வைத்திருந்தான். அந்த துவாரத்தின் வழியாக புல்லை. நீட்டியவுடன் குதிரைவெடுக்கென வாயால் கௌவிக் கொள்ளும். மிகவும் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அக்குதிரை எலும்பும் தோலுமாக நோஞ்சானாக இருந்தது.

குதிரைக்குத் தீனி வாங்கிப் போடும் பணத்தில் தெனாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான். ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி குதிரைகளை அரண்மனைக்கு வரவழைத்தார் மன்னர். அதன்படி குதிரைகள் அனைத்தும் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டன மன்னர் குதிரைகளைப் பார்வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிக திருப்திகரமாக இருந்ததால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

அங்கிருந்த தெனாலிராமனை அழைத்து ‘‘உன் குதிரையை ஏன் கொண்டு வரவில்லை'' என மன்னர் கேட்டார். அதற்கு தெனாலிரா மனோ “என் குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால் தான் இங்கே கொண்டு வரவில்லை.” என்றான். “குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம்கொடுத்தனுப்புகிறேன்” என்றான் இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப்படைத் தலைவனை தெனாலிராமனுடன் அனுப்பினார். குதிரைப்படைத்தலைவருக்கு நீண்ட தாடியுண்டு குதிரைப் படைத்தலைவரும் அந்ததுவாரத்தின் வழியாக குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. வலிபொறுக்க மாட்டாத குதிரைப் படைத் தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியை குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரையாகத்தான் இருக்கும்என்று எண்ணி தெனாலிராமன் வீட்டுக்கு விரைந்தார்.

அங்கு குதிரையின் வாயில் குதிரைப் படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பரிக்கச் செய்தார். பின் குதிரையைப் பார்த்தால் குதிரை எலும்பும், தோலுமாக நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்ததைக் கண்டு மன்னர் கோபங்கொண்டு அதன் காரணத்தைத் தெனாலிராமனிடம் கேட்டார். அதற்குத் தெனாலிராமன் “இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத்தலைவரின் தாடியை கவ்விக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப் படைத் தலைவரின் கதி அதோகதிதான் ஆகி இருக்கும்” என்றான்.




இதைக் கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்து விட்டார். பின்னர் தெனாலிராமனை மன்னித்து விட்டார்.

# இரண்டு வரி பொன்மொழிகள்

» எப்படி உடற்பயிற்சி உடலுக்கு அவசியமானதோ அதுபோல வாசிப்பு மனதிற்கு அவசியம்.

» மலர்களுக்கு சூரிய ஒளி எப்படியோ அதுபோல மனித நேயத்திற்கு புன்னகை.

» படித்தல் என்பது ஒரு சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கான அடிப்படை கருவியாகும்.

» பளிங்கு கல் அழகிய சிற்பமாவது போல், கல்வியினால் ஆன்மா சிறப்படைகின்றது.

» எங்கு அறிவு முடிவடைகின்றதோ அங்கு மதம் தொடங்குகின்றது.

» விவாதத்தில் நிச்சயமாக வெற்றி பெற ஒரே வழிதான் உண்டு. அது விவாதங்களை தவிர்ப்பதுதான்.

» அன்பு கிடைக்கவில்லையே என்று ஏங்காதீர்கள். அன்பை கொடுக்கப் பழகுங்கள் அன்பு தானாகக் கிடைக்கும்.

» நீங்கள் எப்படியும் யோசித்தேயாக வேண்டும், அதை ஏன் பெரிதாக யோசிக்கக்கூடாது?

» தீர்வுகளில் கவனம் செலுத்துவதே முக்கியம்; பிரச்சினைகளில் அல்ல.

» புத்திசாலித்தனமான மனிதர்கள் நல்லவர்களே ஆனால் சிறந்தவர்கள் அல்ல.

» அனைத்துவகையான அறிவுக்குமான ஆரம்பநிலை ஒரு அன்பான இதயமே.

» எந்த சக்தியாலும் அசைக்க முடியாத சக்தி ஒன்றுள்ளது அது மனிதனின் மனோசக்தி.

» ஒவ்வொரு உன்னதமான பணியும் முதல் யோசனையில் சாத்தியமற்றதே.

» ஞானிகள் விலகியிருப்பது உலகத்தை வெறுக்க அல்ல; அதனை அறியவேதான்.

# வெற்றி தத்துவங்கள்

» வாழ்க்கையில் வெற்றி என்னும் படிகளை நாம் தொடும் போது அதில் தோல்வி என்னும் 1,000 குழிகள் இருக்கும்.. குழியில் விழுந்து முயற்சிப்பவன் விண்ணை தொடுவான்.. குழியில் விழுந்து முயற்சிக்காதவன் மண்ணை தொடுவான்.

» வாழ்க்கை என்பது குறைவான தகவல்களை வைத்துக்கொண்டு சரியான முடிவுக்கு வரும் ஒரு கலை.

» நேரத்தை வீணாக்கத் துணிந்தவர்கள், வாழ்க்கையின் மதிப்பை அறியாதவர்கள்.

» லட்சியம் பெரிதாக இருக்குமானால் நமது வெற்றியும் பெரிதாக இருக்கும்.

» எல்லோருமேவெற்றியைவிரும்புகின்றனர். ஆனால் ஒரு சிலரே அதற்காக உழைக்கின்றனர்

» மனிதராகப் பிறந்த எல்லோரும் தவறு செய்கிறார்கள். மூடர்களோ அதை தொடர்ந்து செய்கிறார்கள்.

» உங்கள் காலில் நில்லுங்கள், அது தானாகவே உங்களை வழிநடத்திச் செல்லும்.

» எதிலேனும் சிறந்து விளங்குவதற்காக எத்தகைய முயற்சிக்கும் அஞ்சாதீர்.

» மிக அதிக உயரத்தை அடைய விரும்பினால் கீழ்மட்டத்திலிருந்து தொடங்கு.

» கற்றுக்கொள்வதற்காக வாழுங்கள், உண்மையில் நீங்கள் வாழ்வதற்கு கற்றுக்கொள்வீர்கள்.

» உங்கள் வெற்றியின் ரகசியம், உங்களுடைய தினசரி செயல்பாட்டின் மூலமே நிர்ணயம் செய்யப்படுகின்றது.

» பணத்தை விட நேரம் அதிக மதிப்புடையது ஏனென்றால் நேரம் ஈடு செய்ய முடியாதது.

» வெற்றி என்பது உங்களுக்கு என்ன தேவையோ அதை பெறுவது; மகிழ்ச்சி என்பது நீங்கள் எதை பெற்றீர்களோ அதை விரும்புவது.

» பலகீனமான மனங்களே சோம்பலிடம் தஞ்சம் அடைகின்றன. முட்டாள்களின் சுகமான பொழுதுபோக்குதான் சோம்பல்.

» நிறைய பேர் அறிவுரை பெறுகிறார்கள். ஆனால் அறிவுள்ளவர்கள் தான் அதனால் பயன் பெறுகிறார்கள்.

» எதிர்காலத்தை எண்ணி அஞ்சாதவனே நிகழ்காலத்தை நுகரலாம்.

# காது கேளாமை

பிறந்த குழந்தைகள் சத்தத்திற்கு மறுகுறிப்பு தெரிவிக்கின்ற வகையில் திடுக்குறும், கண்களை இமைக்காமல் முறைத்து அதன் கேட்கும் திறனை வெளிப்படுத்தும். வளர்கின்ற போது பெற்றோரின் குரலை அடையாளம் கண்டு கொள்ளும், மேலும் கூவிக் கொண்டு, களகளவென ஒலி எழுப்பி மகிழ்ச்சியாக அனுபவித்துக் கொண்டு இருக்கும். கேட்கும் திறன், மொழி வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பிறகு, குழந்தைகள் சப்தங்களுடன் கருத்தை இணைக்க கற்றுக்கொள்வர்.

கேட்கும் திறனாற்றல் குறைபாடுடன் குழந்தை பிறக்க நேரிட்டால் அதன் கருத்துக்களை சப்தங்களுடன் இணைக்க முடியாமல் போகும். ஏனெனில் அவர்கள் சப்தத்தை கேட்டிருக்கவே மாட்டார்கள். இதன் விளைவாக தகவல் தொடர்பில் தடங்கல் அல்லது இடையூறுகள் ஏற்படும்.

**காது கேளாமை மற்றும் சற்றே செவியில் உள்ள குறைபாடு**

காது கேளாத குழந்தை என்பது காது கேட்கும் உணர்வினை மொழியை கற்பதற்குமுன்பே இழந்து விடுவது ஆகும். இதன் மூலம் குழந்தையானது பிறக்கும் போதே கேட்கும் திறன் இன்றி பிறந்துள்ளது உறுதியாகிறது. இக்குழந்தை எப்போதும் அமைதியாக, செயல்பாடின்றி இருக்கும்.

சற்றே செவிடாக உள்ள குறைபாடு என்பது மற்றொரு வகையில் இயல்பாய் வாழ்க்கையின் பின் பகுதியில் ஏற்படும் குறைபாடாகும். குழந்தையானது பல்வேறுபட்ட அளவுகளில் கேட்கும் திறனை இழக்கும் நிலை ஏற்படுகிறது.



**கருமுதலமைவுடைய காது கேளாமை**

கருமுதலமைவுடைய காது கேளாமை என்பது மரபணு குறைபாடுகளினாலும், பிறப்பின் போது முழு வளர்ச்சி அடையாததாலும் ஏற்படலாம். கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களுக்குள், ஒரு கர்ப்பிணி மணல் வாரி அம்மை நோயால் (German Measles) தாக்கப்படும் போது காது கேளாத குறையுடன் குழந்தை பிறக்கும். கடுமையான மஞ்சள் காமாலை நோயால் தாக்கப்பட்டு, தாயின் இரத்தம் கருவில் உள்ள குழந்தையின் இரத்தத்துடன் பொருந்தாத நிலை இருக்கும் போது அதன் விளைவாககரு முதல்மைவுடைய காது கேளாமை ஏற்படும்.

**இயல்பாய் ஏற்படும் காது கேளாமை**

கலவையாக கேட்கும் திறன் இழத்தல் என்பது கேட்கும் திறனின் ஆற்றல் குறைவுகள், ஒலி கடந்து செல்லும் கும் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு வழி வகுத்து தரவேண்டும். பெற்றோர், குழந்தைக்கு ஒலியைக் கண்டறிந்து தொடர்பு செய்து கொள்ள உதவி செய்யலாம். அதாவது ஓடும் நீரை - குழாயுடன், மணியோசையை கதவுடன் அறிவாற்றலை பயன்படுத்தி பெற்றோர்கள், விளையாட்டு முறையிலான நுட்பங்களைக் கொண்டு குழந்தைகளுக்கு உதவி, ஒலியை கண்டுணரச் செய்யலாம்.


உதாரணம்: இசை ஒலியுடன் கூடிய விளையாட்டு பொம்மையை மறைத்து வைத்தல் மற்றும் குழந்தையை உற்சாகப்படுத்தி அந்த பொம்மையின் ஒலியை வைத்து தேட வைத்தல். பெரியவர்களின் உதவியோடு குழந்தையை ஒலிகளில் வேறுபாடுகளை கண்டறியச் செய்ய வேண்டும்.

உதாரணம்: தாய் மற்றும் தந்தையின் மாறுபாடுள்ள குரல், பாட்டு மற்றும் அழுகை முதலானவை. அடுத்த படி என்னவென்றால், பேச்சு ஒலிகளை அடையாளம் காண்பது. இது நேரடியாககுழந்தையின் பார்வை மற்றும் பிற புலன்களைப் பயன்படுத்தும் திறனைப் பொறுத்து அமைகிறது.

**மனவெழுச்சிகள் மற்றும் சமூகத் தேவைகள்**

ஏற்கெனவே படித்தது போல ஐயப்பாடு என்பது இரண்டாவது பண்பாக காது கேளாத குழந்தைகளிடம் காணப்படுகிறது. முக்கியமாக, மனவெழுச்சியில் இக்குழந்தைகளின் சமூக நடவடிக்கைகள் செம்மைப்படுத்தப்பட்டு, பண்பும் மேம்படுத்தப்பட வேண்டும்.


‘அன்பு செலுத்தி, அன்பை பெறுதல்’ என்பது கண்பார்வையற்ற குழந்தைகளுக்கு எவ்வளவு அவசியமோ,



**காது கேளாமை மற்றும் கேட்கும் திறனை இழப்பதற்கான காரணங்கள்**

கேட்கும் திறனில் குறைபாடு மற்றும் கேட்கும் திறனை இழத்தல் என்பது கீழ் வரும் காரணங்களால் ஏற்படுகிறது.

ஒலி கடந்து செல்லும் பாதையில் பாதிப்பு ஏற்படுவதால் (Conductive Deafness) உண்டாகும் காது கேளாமை என்பது காதின் அமைப்பைப் பற்றி தெளிவாகதெரிந்து கொண்ட பிறகு நன்கு விளங்கும். காதின் வெளிப்புறத்திற்கு ஒலியானது காற்றின் மூலமாக செலுத்தப்படுகிறது.




செவிப்பறையின் சவ்வு போன்ற உறையை ஒலி அடைந்ததும், ஒலி அலைகள், அரைவட்ட சுற்றளவு உடைய கால்வாய்களில் திரவ நிலையை மாற்றம் அடையச் செய்கின்றன. வெளிப்புறக் காதில் காற்று நுழைந்து செல்வது ‘ஒலி கடந்து செல்லும் பாதை வழி’ என்று கூறப்படுகிறது.

கடந்து செல்லும் பாதை வழியானது பல காரணங்களால் பாதிப்படையலாம்.

**காதினுள் மெழுகு உருவாதல்**

பாதையின் வழியில் வெளிப் பொருட்கள் இருத்தல், காதின் வெளிப்புறத்தில் வீக்கம் இருத்தல் இது போன்ற நிலைகளில் தற்காலிகமாக காது கேட்காத நிலை இருக்கும். இந்நிலையினை மருத்துவ சிகிச்சை மூலமாக சரி செய்து விடலாம். ஒலி கடந்துசெல்லும் காது கேளாமையில் முன் தொண்டையிலிருந்து, நடுக் காது குழி வரை செல்லும் குழாயினில் (Eustachian Tube) அடைப்பு ஏற்படும். அடைப்பை ஏற்படுத்தும் திரவம் அடர்வாகி விடும். அந்த திரவம் அறுவை சிகிச்சை மூலமாக வெளியேற்றப்படும்.

புலன் உணர்வு நரம்பு சார்ந்த காது கேளாமை செவிப்பறை, செவியின் சுருள்வளை, கேட்டல் தொடர்புடைய நரம்பு, மற்றும் தொடர்புடைய மூளை செல்களில் ஏற்படும் பாதிப்பால் புலன் உணர்வு நரம்பு சார்ந்த காது கேளாமை ஏற்படும்.




பாதை பாதிப்பால் காது கேளாமை மற்றும் புலன் உணர்வு நரம்பு சார்ந்த காது கேளாமை ஆகியவைகளின் கலவையின் விளைவாக ஏற்படுகின்றது.

**காது கேளாத குழந்தையின் பண்புகள்**

குழந்தை காது கேளாததோடு, பேச முடியாத நிலையுடனும் இருக்கும். பேச்சுக்குறைபாடு என்பது சாதாரணமாக காது கேளாத குழந்தைகளிடம் அதிகமாகக் காணப்படும். அக்குழந்தைகள் மொழி / சொல் தொகுதிகள்



ஆகியவற்றை கற்றுக்கொள்வதில் சிரமப்படுவார்கள்.

ஒருவருக்கும் கேட்காத மொழியைக் கற்றுக் கொண்டு தகவல்களை பரிமாறிக்கொள்வது ஒரு மிகப் பெரிய சவாலாக அமைந்து விடுகிறது. முக்கியமாக, இக்குழந்தைகள், அறிவுத் திறனில் குறைவாக இருப்பார்கள். ஏனெனில், அவர்களால் இருக்கும் வாய்ப்புகளை ஒழுங்காக பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

இக்குழந்தைகள் ஐயப்பாடு நிறைந்த மனதுடன் இருப்பார்கள். ஏனெனில்பார்த்தல், கேட்டலில் ஒருங்கிணைப்பு இல்லாமையினால், இதனால் பிறருடன் நட்புறவு ஏற்படுத்தி கொள்வதிலும், திறனின்றி இருப்பார்கள்.

ஒரு காது கேளாத குழந்தை எப்போதும் மாறுபட்டு இருப்பதுடன் பிடிவாதத்துடனும் இருக்கும்.

கேட்கும் ஆற்றல் திறனில் குறைவு ஏற்பட்டு எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடிய தன்மை குழந்தைகளிடத்தில் ஏற்பட்டால் செயல்பாட்டில் குறைவு ஏற்படச் செய்து விடுவதுடன், தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திவிடும்.

மோசமான தகவல் தொடர்புகள் அபாரமான விளைவுகளால், சமூகத் தொடர்புகளில் பிரச்சனைகளை ஏற்படுத்தும்.

**ஒரு காது கேளாத குழந்தையின் சிறப்பான தேவைகள்**

காது கேளாத குறைபாடு அதிகமான பிரச்சனைகளை மொழி, சொல் தொகுதி முதல்புரிந்து கொள்ளும் திறனிலும், தகவல் தொடர்பு கொள்வதிலும் ஏற்படுத்தும்.

**உடல் சார்ந்த தேவைகள்**

பயனுறுதியுள்ள செயல்பாட்டினால், உடல் சார்ந்த வசதிகளை செய்து பராமரித்து, இக்குழந்தைகளின் கேட்

அதே போன்று காது கேளாத குழந்தைகளுக்கும் முக்கியமானதாகும்.

அன்பும், பாசமும் மனவெழுச்சிகளுக்கு பாதுகாப்பை அளிப்பதோடு, மேன்மையான கற்றலுக்கு தேவையான ஊக்குவிப்பையும், உற்சாகத்தையும் அளிக்கிறது.

கற்றலின் தேவைகள்: இதில் குழந்தையின் மொழியை புரிந்து கொள்ளும் திறனும் உள்ளடங்கி உள்ளது. பார்வை யாலும், உடல் அசைவுகளாலும், தகவல் தொடர்பு கொள்ள கற்றுக் கொள்வர்.

வாய்மொழியான முறை அல்லது உதடசைவால் வாசிப்பது என்பது உதட்டசைவுகளை கவனித்து, ஒலிகளை கண்டறிவது, காது கேளாத குழந்தைகளுக்கு கற்பிக்க ஒரு சிறந்த முறையாகும். இது ஒரு மெதுவான முறையாகும். இம்முறையில் கற்றுக் கொள்பவர் மற்றும் கற்பிப்பவர் அதிகமான பொறுமையை கடைபிடிக்க வேண்டும்.

உடல், கை, கால் அசைவு முறை அல்லது சைகை மொழி: இம்முறையில் குழந்தைசைகைகளால், குறிப்புகளால் மற்றும் விரல் எழுத்துக் கூட்டல்களின் உதவியால் தகவல் தொடர்பு கொள்கிறது.

**சுதந்திரமாக இருப்பதன் அவசியம்**

காது கேளாத குழந்தை சுதந்திரமாக இருப்பது மிகவும் அவசியம். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோரை சார்ந்திருக்கும் நிலையை குறைக்கிறது. சுதந்திரமாக செயல்படுகின்ற திறன் பெற்றால் அக்குழந்தைகள், அவர்கள் வாழும் சமூகத்தில் மிக முக்கியமான உறுப்பினராகக் கருதப்படுவர். கேட்கும் சாதனங்களின் கண்டுபிடிப்புகள், காது கேளாத வர்களுக்கு பெரும் நிம்மதியை கொடுத்துள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 258

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சர்வதேசக் கட்டமைப்பு ஏன்?

சர்வதேசக் கட்டமைப்பு முன்னெடுக்கப்படுவது ஏன் என்ற கேள்வி நியாயமாக எழுவதுதான்.

அதற்கு மிக முக்கியமான காரணம், தமிழர் தரப்பின் அரசியல்வாதிகளின்



போக்குகளும், நடப்புகளும், அவர்கள் தலைவர்களாக வெளிப்படுத்தும் தங்கள் கர்வங்களும்தான்.

இன்று இருக்கும் எந்தத் தமிழ் தேசிய பரப்புக்கும் விடுதலை புலிகளைப் போல் கட்டமைப்புக்கள் இருந்ததில்லை. அவர்களுக்கு இருந்த அளவு ஆதரவும் இல்லை. சிலர் அந்தப் புலிகளின் வாலிலும், காதுகளிலும் தொங்குபவர்களாகவே இருக்கிறார்கள்.

அடுத்து கொள்கை சார்ந்த போராட்டம் என்பது வேறு, கொள்கை சார்ந்த அரசியல் அன்றில் அரசியலுக்கான கொள்கை என்பது வேறு.

பிரபாகரன் தனி ஈழம் என்ற முடிவையே கொள்கையாகக் கொண்டிருந்தார். விடுதலைப் புலிகளுக்கும் அதுஊட்டப்பட்டது. அந்தக்கொள்கைக்காகக் கடைசி வரை பிரபாகரன் போராடினார். அதில் தன்னையும் தனது முழு குடும்பத்தையும் இழந்தார். பல்லாயிரம் விடுதலை புலிகள் தங்களை அர்ப்பணிப்பு செய்தனர்.

கொள்கைக்காகவே நின்று அந்தக் கொள்கைக்காகவே உயிரையும் தந்தமையால் அவரும் அவரது வீரர்களும் மதிக்கப்படுகிறார்கள்.

ஆனால் அவர்கள் தங்கள் கொள்கைகளுக்கென பிடிவாதமாகச் செய்த அரசியல் அவர்களுக்கே குழி பறித்தது.

இந்தியாவின் பிராந்திய ஆளுமையை எதிர்த்தும் வெற்றி பெறுவோம் என்ற இறுமாப்பு. பின் ரணில் ஜனாதிபதியாகி விடலாம் என்ற எண்ணத்தில் அவரை வீழ்த்துவதை சர்வதேசம் எப்படி பார்க்கும் என்ற அரசியலையும் புரிந்து கொள்ளாமல், தமிழ் மக்களை வாக்குச்சாவடிகளுக்கு போகாது தடுத்து, மஹிந்தவின் வெற்றிக்கு வழி வகுத்து, அவரை ஜனாதிபதியாக்கி, அவராலேயே அழிந்து போனார்கள்.

ஆயின், கொள்கை என்று தங்களுடைய பதவிகளுக்கும் வெற்றிக்குமாக அதில் அரசியல் நடத்தியவர்கள் தமிழரசு, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பின் இப்பொழுது சுக்கு சுக்காக உடைந்து சிதறிப் போய் இருக்கும் எல்லோருமே கொள்கைக்காக போராட்டத்தை நடத்தி (நான் ஆயுதப் போராட்டத்தைக் கூறவில்லை) முன்னெடுத்துச் செல்லக்கூடிய, சர்வதேசங்களை அணுகக் கூடிய கட்டமைப்புகள் எதுவும் இவர்களிடம் இருந்ததில்லை.

ஏன், அவலங்கள் நடந்த காலங்களில் மக்களுக்கு நிவாரணங்களை ஏற்படுத்தி, நடைமுறைப்படுத்தக் கூடிய கட்டமைப்புகள் கூட இருக்கவில்லை.

மழை கருக்கட்டக் கிளம்பும் புற்றீசல்கள் போல் தேர்தல் காலங்களில் கொள்கைக்காக வீராவேசம் பேசுவார்கள். அதில் வென்றால் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார்கள். அவ்வளவுதான்.


ஆனால் இன விகிதாசாரத்திலும்



நாடாளுமன்ற பெரும்பான்மைகளாலும் தமிழ் மக்களுக்கு எதிரானதோ, அன்றில் தரப்படாத ஒன்றையோ, எதிர்த்து நிறுத்தவோ, நடைமுறைப்படுத்தவோ, நிர்பந்தித்து பெற்றுக் கொள்ளவோ முடியாது என்பதை அறியாதவர்கள் அல்லர்.

ஆதலால் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி தொடர்ந்து போராட்டங்களை நடத்த வேண்டும் என்ற கொள்கையின் விசுவாசம் இவர்களுக்கு இருந்ததில்லை.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.ஆர் வெல்லுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு தந்து வெற்றி பெற வைத்ததுப் பெற்றது என்ன?



தொடர்ந்த இனவாதமும், மாவட்ட சபையும், பயங்கரவாதத் தடைச் சட்டமும் தான்.

போருக்குப்பின் மைத்திரி, சரத் பொன்சேகா, சஜித் பிரேமதாஸா, டலஸ் அழகப்பெரும என ஜனாதிபதி தேர்தல் காலங்களில் அழைத்து வந்து, மாலைகள் அணிவித்து, மங்கல விளக்குகள் ஏற்றி, தமிழ் மக்களை ஆதரவு தரக் கேட்டார்கள். கடைசியில் கண்ட பயன் என்ன? மைத்திரியோ, சரத் பொன்சேகாவோ, சஜித் பிரேமதாஸா கூட ரணில் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்துவேன் எனக் கூறிய உடனேயே எழுகின்ற பேரினவாத எதிர்ப்புகளுக்கு எதிராக, 'இல்லை, இந்த இனப் பிரச்சினை தீர வேண்டும், 13ஆம் திருத்தம் நடைமுறைக்கு வர வேண்டும்' என்கிறார்களா?

இல்லை. பேராண்மைக்கு ஆதரவு தராவிட்டாலும் பேரினவாத வாக்கு வங்கிகளுக்கு அதிருப்தி தர அவர்கள் விரும்பவில்லை.

இப்படியான அரசியலால் செல்வநாயகம் தொடங்கி, பின்னர் பிரபாகரன், போருக்குப்பின் சம்பந்தன் என்ற தலைமைகளின் கீழ் எதனையுமே விட்டுக் கொடுக்காத சிங்களப் பேரினவாதம், இப்பொழுது பிரிந்து நின்று தவில்களும் மகுடிகளும் வாசிக்கும் சுமந்திரன், நீதியரசர், சித்தார்த்தன், செல்வம், சுரேஷ் பிரேமச்சந்திரன், டக்ளஸ் தேவனந்தா, பிள்ளையான் என்று யாருடைய தலைமைகளின் கீழாவது அதனை தந்து விடப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள்



தொடர்ந்து கவனித்து, தங்களைச் சுதாகரித்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் பிரிவினைகளையும், கட்சி மாறல்களையும், பேரினவாதம் தங்களுக்கு சாதகமாகப் பாவித்து இருப்பதையும், அவர்கள் அறுப்பதற்கு செயற்படுவார்களே ஒழிய, எதுவித தானம் தரும் மனப்பாங்கினைக் கூட வெளிப்படுத்த மாட்டார்கள்.

இந்தச் சூழ்நிலைகளில் தமிழ் மக்கள் இருக்கும் அரசியல்வாதிகளை மட்டும் நம்பிக் கொண்டு அல்லது 'அறகலய' போராட்டக்காரர்களுடன் இணைந்து அவர்களுடைய அரசியல் சித்தாந்தங்களில் தீர்வு பெற முடியும் என்ற எண்ணங்களில் நடப்பதும் பிரயோசனங்கள் தரப்போவதில்லை.

இனப் பிரச்சினையின் தீர்வுகளுக்கெனஅடிப்படையானகொள்கைகளில்



அவர்களிடம் இணக்கங்கள் கிடையாது. அதேசமயம் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற சாதக நிலையோ அன்றில் எதிர்க்க மும்முரம் காட்டுபவர்களுக்கு எதிரான அறிக்கைகளை தரவில்லை. அவர்களது முன்னெடுப்புகள் யாவுமே ரணிலை குறி வைத்து வீழ்த்துவதில் இருக்கும். 13 ஆம் திருத்தத்தால் ரணில் கவிழ்கலாம் என்றால் அதில்தான் வகிபாகம் இருக்கும்.

இவற்றுக்காக இனியும் காலங்கள் தாழ்த்தாமல், தமிழ் மக்கள் சர்வதேச கட்டமைப்பை உருவாக்கி, நாட்டில் இருப்பவர்களையும் அதில் இணைத்து, சர்வதேச அழுத்தங்களுக்காக – அவர்களின் நன்மைகளுக்காக – யதார்த்தமான வழிகளில் பயணிக்க கூடியவர்களாக உருவாக வேண்டும்.

அந்தக் கட்டமைப்பு, இந்தியாவில் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தும் இயங்கிக் கொண்டும் இருக்கும் தரப்புகளை ஆராய்ந்து, அணுகி, அவர்களின் மூலம் மத்திய அரசாங்கத்துடன் நல்லெண்ண நம்பிக்கைப் பேச்சுக்களை ஏற்படுத்தி, பின்னர் அந்த அழுத்தங்களை மற்றைய சர்வதேச நாடுகளிலும் அங்குள்ள அமைப்புகள் மூலம் வியாபிக்க வேண்டும்.

(வளரும்...)

# 2048இல் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற அனைவரும் கைகோர்க்க ரணில் அழைப்பு

## சுதந்திர தின உரையில் அவரே தெரிவிப்பு



2048ஆம் ஆண்டு இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதற்கு அனைவரையும் கைகோர்க்குமாறு நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தில் அறைகூவல் விடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி நேற்று மாலை 6.45 மணிக்கு தொலைக் காட்சி ஊடாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

தனது உரையில் அவர் தெரிவித்ததாவது:

நான் இன்று நிகழ்த்தப்போவது பாரம்பரிய சுதந்திர தின உரை அல்ல. சுதந்திரம் கிடைப்பதற்கு அர்ப்பணித்த, கடுமையாக உழைத்த டி.எஸ். சேனநாயக்க உள்ளிட்ட அனைவருக்கும் மரியாதை செலுத்தி, நான் பேசப்போவது எமக்கு கிடைத்த சுதந்திரத்தைப் பற்றி அல்ல. இன்று நாம் இழந்திருக்கும் சுதந்திரத்தை மீளப்பெறுவது பற்றியே நான் பேசப்போகிறேன்.

75 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை சுதந்திரம் பெற்றபோதுஇ புகழ்பெற்ற 'லண்டன் டைம்ஸ்' நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு கூறியது:

'இலங்கை விரைவில் கீழைத்தேயத்தின் சுவிட்சர்லாந்தாக மாறுவதைக் காண்பதே எமது எதிர்பார்ப்பாகும். 'வேறு எந்த கீழத்தேய நாட்டைப் பற்றியும் அவர்கள் அத்தகைய எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கவில்லை.

ஆனால் தற்பொழுது எமக்கு என்ன நேர்ந்துள்ளது? இன்று நாம் வரலாற்றில் ஒருபோதும் கண்டிராத பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். அண்மைக்கால வரலாற்றில் இவ்வாறானதொரு பாரதூரமான நிலையை நாம் எதிர்கொண்டதில்லை.

நமக்கு ஏன் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது? இந்த நிலைக்கு யார் பொறுப்பேற்கவேண்டும்?

நாம் உண்மையைப் பேசுவோம். இந்த நிலைக்கு நாம் அனைவரும் குறைவாகவோ அதிகமாகவோ பொறுப்புக் கூறவேண்டும். நாம் யாரும் விரல் நீட்டி ஒருவர் ஒருவர் குற்றம் சொல்லமுடியாது.

நாம் ஆரம்பத்திலிருந்தே தவறு செய்தோம். அந்த தவறை சரி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. பாடுபட்டோம். ஆனால் நூறு சதவீதம் சரி செய்ய முடியவில்லை.

சுதந்திரம் பெறுவதற்கு டி.எஸ். பின்பற்றிய வழிமுறை, இலங்கையர் அனைவரையும் ஒன்றிணைப்பதாகும். சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என யாராக இருந்தாலும் இலங்கையர்களாக நாம் முன்னோக்கிச் செயற்பட வேண்டும் என அவர் அன்று தெரிவித்தார்.

ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு நாங்கள் பிளவுபட்டோம். இனம், மதம், பிரதேச ரீதியாக பிரிந்தோம். ஒருவரையொருவர் குறித்துச் சந்தேகம், வெறுப்பு ஏற்படும் வரை பிரிந்தோம். பல்வேறு குழுக்கள், அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்தப் பிரிவைப் பயன்படுத்தின. அதிகாரத்திற்காக மேலும் மேலும் பிளவுகளை ஏற்படுத்தினர். நாம் அவர்களை நிராகரிப்பதற்கு பதிலாக அவர்களுக்கு அதிகாரம் அளித்தோம்.

அரசியலில் உண்மையைச் சொல்லாமல் பொய் சொன்னார்கள். உண்மையைச் சொன்ன அரசியல்வாதிகளை மக்கள் நிராகரித்தனர். நாட்டின் உண்மை நிலையைச் சுட்டிக்காட்டி அதற்கான பரிகாரம் தேடுபவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பொய்களால் மகிழ்விப்பவர்களுக்கு அதிக அங்கீகாரம் கிடைத்தது. நாம் வாக்குறுதி அரசியலில் சிக்கிக்கொண்டோம். எங்களுக்குச் சொந்தமில்லாத கடன் வாங்கிய வளங்களை நம்பியிருந்தோம். மேலும் மேலும் கடன் வாங்கினோம்.

'அரசாங்கமென்பது வளங்களின் ஊற்று' என்ற மனப்பாங்கை நாங்கள் ஏற்படுத்திக்கொண்டோம். அந்த ஊற்றுக்களில் இருந்து கிடைக்கும் பல்வேறு வளங்களை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே ஆட்சியாளர்களின் கடமை என்று பலரும் நினைத்தனர். அதன்படி தொழில்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வளங்கள் விநியோகிக்கப்பட்டன. உபகரணங்கள் வழங்கப்பட்டன. பணமும் விநியோகிக்கப்பட்டது.

நம்மில் பெரும்பாலானோர் வாக்களித்தது நாட்டுக்காக அல்ல. எங்களுக்கு தொழில்பெற, பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு, விலைமனுக் கோரலுக்கு அனுமதி பெற நாம் வாக்களித்தோம். தனிப்பட்ட ஆதாயத்திற்காகவே நாம் தேர்தல் வேட்பாளர்களுக்காகப் பணியாற்றினோம்.

நம்மில் பெரும்பாலானோர் தேர்தலில் போட்டியிட்டதுகூட நாட்டுக்காக அல்ல. தங்களுக்காக. அதிகாரத்தை பெறவும் சலுகைகளை அனுபவிக்கவும் மேலும் சம்பாதித்துக்கொள்ளவும் தேர்தலில் போட்டியிட்டனர்.

நாம் வாக்குறுதிகளில் சிக்கிக்கொண்டோம். கோசங்களில் சிக்கினோம். இவை அனைத்தினதும் விளைவாக நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அரசியல் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் கோசங்களில் தெரிவிக்கப்பட்டவற்றை உறுதிப்படுத்தவும் நாங்கள் மேலும் மேலும் கடன் வாங்கினோம்.

நாம் அதிகம் அதிகமாக முதலீட்டுக்காக அல்லாமல், நுகர்வுக்காகத்தான் கடன் வாங்கினோம். 'கடன் முதலீட்டிற்காக அன்றி நுகர்வுக்காக அல்ல' என்று புத்தரின் போதனைகள் கூறுகின்றன. பௌத்தத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு புத்தரை வணங்கி பௌத்த தர்மத்தை தாண்டிச் சென்றுவிட்டோம். சிங்கப்பூரை மீளக் கட்டியெழுப்புவது பற்றி அறிந்து கொள்வதற்காக இலங்கை வந்த லீ குவான் யூ பல வருடங்களுக்குப் பிறகு இவ்வாறு கூறினார்.

'தேவையில்லாமல் அரசியலுக்கு முன்னுரிமை அளித்தமையே உங்கள் நாட்டில் இந்த நிலை ஏற்படக் காரணம். உங்கள் நாட்டை முன்னுதாரணமாகக் கொண்டிருந்தால் சிங்கப்பூர் அழிந்திருக்கும்".

உண்மையில், நாம் இப்போது அழிவு நிலையை நோக்கி சென்றுள்ளோம். இந்தக் காயத்தை தொடர்ந்து வைத்திருக்க விரும்புபவர்களும் உள்ளனர். ஆனால் நான் அதனை விரும்பவில்லை. ஒரு சத்திரசிகிச்சை செய்து இந்த காயத்தை சுகப்படுத்திக் கொள்வோம். இது கடினமானது. வேதனையானது. கஷ்டமானது. ஆனால் அந்தச் சோகத்தையும் வேதனையையும் சிறிது காலம் அனுபவித்தால், காயத்தை முழுமையாகக் குணப்படுத்த முடியும்.

சில அரசியல் கட்சிகள் சுட்டிக் காட்டும் குறுக்குவழிகளால் இந்த நெருக்கடியிலிருந்து எமக்கு மீள முடியாது.

இந்த நெருக்கடியை சமாளித்து உண்மையான பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை அடைய வேண்டுமானால், நாம் செல்ல வேண்டியது ஒரே ஒரு வழிதான். இந்தக் குழியிலிருந்து ஏறுவதற்கு எமக்கு ஒரே ஒரு ஏணிதான் உள்ளது. அரசியல் நலன்களுக்காக இந்த ஏணியை ஒதுக்கித் தள்ளினால், நமக்கு ஒரு நாடு இருக்காதுஇ நமக்கு நாளை இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நாம் இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தையும் ஆபத்தையும் இதற்கு முன்னரும் நான் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் மிகவும் கடினமாக இருக்கும் என்று நான் முன்கூட்டியே கூறியுள்ளேன். இந்த இக்கட்டான சூழலை நாம் விருப்பாத நிலையிலும்கூட எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் நலனுக்காக நாம் அந்த இக்கட்டான நிலையை தாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. அரசியல் இனிப்புப் பேச்சுகளால் இந்நிலைக்குத் தீர்வு கிடைக்காது.

இலவசக் கல்வியினால் இந்நாட்டில் பெருமளவிலான மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு நடுத்தர வர்க்கத்தினராக மாறினாலும் இன்று அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாத நாடாக மாறியுள்ளது. தோளோடு தோள் நின்று உழைக்க வேண்டிய இளைஞர்கள் இன்று கடவுச் சீட்டுகளைப் பெற வரிசையில் நின்று கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். அதை நாம் மாற்றவேண்டும்.

அப்படியானால்இ நாம் இந்தப் பொருளாதாரத்தை நவீனமயமாக்கி, உலகிற்கு திறந்துவிடவேண்டும். மக்களை ஏமாற்றி அவர்களை நிரந்தர ஏழைகளாகவும்இ தங்கி வாழ்பவர்களாகவும் மாற்றும் ஊழல் அரசியல் வாதத்தையும் தோற்கடிக்கவேண்டும். இந்நாட்டு இளைஞர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் 'சிஸ்டம் சேன்ஜ்' என்ற முறைமை மாற்றம் இதுதான்.

அதற்காக எனது அரசாங்கம் புதிய சீர்திருத்தப் பாதையில் பிரவேசித்துள்ளது. அதற்காக எடுக்கப்படும் முடிவுகள் சில நேரம் வேதனை தருவதாக இருந்தாலும், இந்த நெருக்கடியில் இருந்து வெளிவர அந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இந்த நெருக்கடியை வெற்றிகொள்ள வேண்டுமாயின், நாம் குறுகிய அரசியலில் இருந்து விலகிச் செல்லவேண்டும். நாம் ஒரு தாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக இந்தச் சவாலை எதிர்கொள்ளவேண்டும். சவாலை வெற்றிகொள்ளும் பாதையை வலுப்படுத்த நம்மால் முடிந்த அளவு பங்களிக்கவேண்டும். அனைத்து வேற்றுமைகளையும் புறந்தள்ளிவிட்டு இலங்கையர்களாக நாம் அனைவரும் முன்னேறிச் செல்லவேண்டும்.

அதன் மூலம் வலுவான புதிய பொருளாதாரம் ஒன்று உருவாக்கப்படவேண்டும். அதற்கான அடிப்படைப் பணிகளும், அடித்தளமும் தற்போது தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான கடினமான பணிகளை நாங்கள் வெற்றிகரமாகச்செய்து வருகிறோம். விரைவில் அவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதால் மட்டும் எம்மால் திருப்தி அடைய முடியாது. ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலும் நாம் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். இந்த அரசியல் முறைமை, நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், அரச பொறிமுறை ஆகிய அனைத்துத் துறைகளும் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றப்படவேண்டும்.

இந்த மாற்றம் நாட்டுக்கும் நமக்கும் நல்லதாக அமையவேண்டும். புதிய முறைமையில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் கருத்துக்களுக்கும் பிரதிநிதித்துவங்களுக்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இந்த முறைமை மாற்றத்துக்கு அவசியமான பல்வேறு சட்ட ஏற்பாடுகளை நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

அது போன்றே வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கனவே நியமித்துள்ளோம்.

அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின்படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

காணிகளை மீளக் கையளித்தல்இ கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

அது போன்றே ஒற்றையாட்சி அரசில்இ அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

நான் முயற்சிப்பது மேலோட்டமாக தெரிகின்ற நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க அல்ல. நோயின் மூலக்காரணியை நிவர்த்தி செய்யவே முயற்சிக்கிறோம். அது சிரமமானது. மிகவும் கடினமானது. எனினும் நாம் செல்ல வேண்டிய ஒரே வழி அதுதான்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து எனக்கு எடுக்க நேரிட்ட பல தீர்மானங்கள் பிரசித்தமான தீர்மானங்கள் அல்ல என்பதை நான் அறிவேன்.

ஆனால் அந்தத் தீர்மானங்களால், இன்று இந்த நாட்டின் எந்தக் குடிமகனும் எரிபொருள் வரிசைகளில் நீரின்றி இறக்கவில்லை. சமையல் எரிவாயு இல்லாமல் பட்டினியில் இல்லை. உரம் இல்லாமல் சாபம் இடவில்லை.

எனவே, அராஜக அரசியல் சக்திகள் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், இந்த நாட்டை நேசிக்கும் பெரும்பான்மையான மக்களுடன் இணைந்து இந்தப் புதிய சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுப்பேன்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மனதில் கொண்டு ஒற்றுமையுடன் திட்டமிட்டு முன்னேறினால் 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த நாடாக மாறலாம்.

உலகில் வேறு எந்த நாட்டிடமும் கையேந்தாத அபிவிருத்தி அடைந்த நாடாக மாறலாம். உண்மையான சுதந்திரத்தையும் அடைய முடியும்.

நமது பிள்ளைகள் உலகுடன் போட்டி போடும் வகையில் புதிய நாட்டை உருவாக்குவது நம் அனைவரதும் பொறுப்பாகும். எனவேஇ இந்த இக்கட்டான காலகட்டத்தை வெற்றிகொள்ள அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணையுமாறு நான் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் ஒன்றுபடுவோம்! கைகோர்ப்போம்!

அவ்வாறு கைகோர்த்து எதிர்வரும் 25 ஆண்டுகளுக்காக நாம் தயாரித்துள்ள திட்டத்திற்கமைய ஒன்றுபட்ட பயணத்தை மேற்கொள்வோம்.

அனைத்து தரப்பினரின் கருத்துக்களுக்கும் ஏற்ப அந்தத் திட்டத்தை மேம்படுத்துவோம். மேலும் வலுப்படுத்துவோம். அவற்றை மேலும் முறைமைப்படுத்தி நெறிப்படுத்துவோம்.

இந்த முயற்சியில் இணைந்து கொள்ள வேண்டியது, இலங்கை வாழ் மக்களான நாம் மட்டும் அல்ல உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் இலங்கையர்களும் இந்தப் பயணத்திற்குத் தோள்கொடுக்க வேண்டும். ஒன்றிணைய வேண்டும். இந்த இலக்குகளை அடைய அனைவரும் முடிந்தவரை பங்களிக்க வேண்டும்.

எனவே நாம் அனைவரும் ஒன்றாக முயற்சி எடுப்போம். ஒற்றிணைந்து அர்ப்பணிப்போம்.

ஒரு தாயின் பிள்ளைகள் போல் ஒன்றுபடுவோம்.

நமது நாடு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2048 ஆம் ஆண்டின்போது எமது நாட்டை உலகின் தலைசிறந்த நாடாக மாற்றுவோம்.

உங்கள் அனைவருக்கும் நன்றி.

காலைக்கதிர் Kalaikkathir

## காந்திய வழியில் ........

(02ஆம் பக்கம் பார்க்க)

விடயங்கள் தொடர்பாக நாங்கள் அங்கேதான் பேசமுடியும். அதனால் செல்வோம். எங்களுடைய மக்களுடைய விடிவிற்காக எவரோடு பேச வேண்டியிருந்தாலும் நாம் பேசுவோம். அதேநேரம் போராட்டமும் நடத்துவோம். இரண்டையும் ஒன்றாகவே செய்வோம். அப்படியாகத்தான் பல நாடுகளுக்கு விடிவு கிடைத்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தை எடுத்துப் பாருங்கள். அண்ணல் காந்தி போராட்டம் நடத்திக்கொண்டிருந்தவேளையிலே கப்பலிலே பிரித்தானியாவிற்குச் சென்று அங்கு பேச்சு நடத்தினார்.

காந்தி குல்லாயை அணிந்திருக்கின்றோம். இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் நாங்கள் சொல்லுகின்ற செய்தி இதுதான். அமைதி வழியிலே அறவழியிலே அகிம்சை வழியிலே நாம் பெரும் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

இன்று நாம் முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தோடு நாட்டு மக்கள் அனைவரும் இணைந்துகொள்ள வேண்டும் என்கிற அறைகூவலையும் நான் விடுக்கின்றேன். இன்று சிங்கள மக்களும் தங்களுக்கும் சுதந்திரமில்லை என்று சொல்லத் தொடங்கிவிட்டார்கள். மருதானையிலே சிங்கள மக்கள் முதல் தடவையாகப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு கரிநாளாக கொழும்பிலும் பெரும் போராட்டங்கள் நடக்கின்றன.

எனவே இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் விடுக்கும் அறைகூவல் உங்களுக்கும் சுதந்திரம் கிடைக்கவில்லை, அதை அடைய எங்களோடு வந்து இணைந்துகொள்ளுங்கள். விடுதலைக்காக நாம் நடத்தும் போராட்டத்தில் அனைவரும் வந்து சேர்ந்துகொள்ளுங்கள். எங்களுக்கு விடுதலை கிடைக்கும்போதுதான் உங்களுக்கும் விடுதலை கிடைக்கும். - என்றார்.

## இலங்கையின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினேஷ் குணவர்த்தன ஆகியோரின் தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பு - காலிமுகத்திடலில் நடைபெற்ற இந்த 75 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள், 'நமோ நமோ தாயே நூற்றாண்டுக்கான முதற்படி' எனும் தொனிப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்டதாகவும் அந்தக் குறிப்பு தெரிவித்தது.

நேற்றைய நிகழ்வுகளின் காட்சிகள் வருமாறு:

ஜனாதிபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் இலங்கை இராணுவத்தினர் இசைவாத்தியங்களை இசைத்த பின்னர், பாதுகாப்பு படைகளின் பிரதானி, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரால் ஜனாதிபதி, விழா நடைபெறும் மைதானத்தின் கொடிக் கம்பம் அருகே அழைத்து வரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பாரம்பரிய மேள வாத்திய இசைக்கு மத்தியில் ஜனாதிபதியால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதிவிசேடமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து 105 பாடசாலை மாணவர்கள் தேசிய கீதத்தைப் பாடினர். தமிழ் மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் மற்றும் 'தேவோ வஸ்ஸது காலேன' கீதம் என்பவற்றைப் பாடினர்.

இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்காக உயிர் தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவுகூரும் வகையில் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதைச் செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்த்து வைக்கப்பட்டன.

இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்த 75ஆவது சுதந்திர தின விழாவில் முப்படை, பொலிஸ், மற்றும் சிவில் பாதுகாப்புப் படையணிகளின் அணிவகுப்புகள் அலங்கரித்தன.

இலங்கை தேசத்தின் வலிமையையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்தும் வகையில் இராணுவம், கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தைச் சேர்ந்த 100 பேர் தேசியக் கொடியை ஏந்திய வாறு அணிவகுத்துச் சென்றனர்.

முப்படைகளின் கவச வாகனங்களும் இதில் இணைந்திருந்ததோடு ஆயுதப் படைப்பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அணிவகுப்புகள் மற்றும் 21 ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் 29 ஊனமுற்ற அதிகாரிகளும் ஊர்வலத்தில் பயணம் செய்தனர்.

முப்படை அணிவகுப்புகள் மற்றும் இசைக்குழு அணிவகுப்புகளும் அதில் அங்கம் வகித்தன.

அத்துடன் இலங்கையின் வான் பலத்தை வெளிப்படுத்தும் வகையில், கிபீர் விமானங்கள் உள்ளிட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களின் சாகசங்கள் நிகழ்வை அலங்கரித்ததுடன், இலங்கையின் கடற்பலமும் பெருமையுடன் காட்சிப்படுத்தப்பட்டன. பராசூட் நிகழ்ச்சிகளும் விழாவுக்கு வர்ணம் சேர்த்தன.

மகா சங்கரத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள், பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், ஆளுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், 75ஆவது சுதந்திர தின நிகழ்வில் பங்கெடுப்பதற்காக இலங்கை வந்துள்ள பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் தலைமையிலான தூதுக்குழுவினர், தூதுவர்கள், உயர்ஆணையர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், அமைச்சரவை செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், பாதுகாப்பு படைகளின் பிரதானி, முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பு பிரதானிகள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் படை வீரர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் நேபாள வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதியான கலாநிதி பிமலா ராய் போடியல், ஜப்பானின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டக்கே சுன்குக்கி, பூட்டானின் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சர் ஜாய் பிர் ராய், மாலைதீவுக்கான வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா சஹீட், பங்களாதேஷின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எ.கே அப்துல் மொமன், பாகிஸ்தானின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் திருமதி.ஹினா றபானி கார், இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி.முரளிதரன், பொதுநலவாய செயலாளர் நாயகம் பெட்ரீசியாஸ்கொட்லன்ட் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## சுதந்திர தின நாளில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் இருதரப்பினரும் கலந்துரையாடினர்.

இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் இதன்போது பாராட்டினார்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த அவர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.

## புதிய சுதந்திரப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று 75 ஆவது சுதந்திர தினத்தை வங்குரோத்து மற்றும் வீழ்ச்சியடைந்த நாட்டிலேயே கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டு மக்கள் தாங்க முடியாத பொருளாதார அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பட்டினியால் வாடும் மக்கள், எதிர்பார்ப்புகளை இழந்த இளைய தலைமுறை, கல்வியை இழந்த பிள்ளைகள் பெரும்பேரழிவுக்கு மத்தியில் உள்ளனர். இந்நிலையை மாற்றி நாட்டைக் கட்டியெழுப்பும் புதிய சுதந்திரப் போராட்டம் உள்ளூராட்சிசபைத் தேர்தலின் பின்னர் ஆரம்பிக்கப்படும்.

திருடப்பட்ட பணத்தை மீட்பதற்காக உருவாக்கப்படவுள்ள முகாமைத்துவ அதிகார சபையை வலுப்படுத்தி, இது வரை கொள்ளையடிக்கப்பட்ட அனைத்துப் பணத்தையும் மீட்பதற்குப் பாடுபடுவேன். பண மோசடி சட்டத்தை நவீனமயப்படுத்தி பலப்படுத்துவேன். சர்வதேச நிதித்துறை சார்ந்த சிறந்த நிறுவனங்களைத் தொடர்புகொண்டு நிதி மோசடிக்காரர்களை இனங்காணும் நடவடிக்கையை முன்னெடுப்பேன் - என்றார்.

## அரசியல் தீர்வை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் நேற்று உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

தமிழ்த் தேசத்தின் விடுதலைக்கும் தமிழ் மக்களின் உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் போராட வேண்டிய நிலைக்கு சிங்கள தேசம் இன்று எம்மை நிர்ப்பந்தித்துள்ளது.

இந்தியா தமிழ்மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இராஜதந்திர முறையில் இந்த அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்.

தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் இந்தியா தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் - என்றார் அவர்.

## கிழக்கு நோக்கிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றடைந்தது.

கிளிநொச்சி நகருக்கு வெளியே இருந்து மீண்டும் கால்நடையாகப் பேரணி இரணைமடு வரையும் சென்று அங்கு முதல் நாளை நிறைவு செய்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணி இன்று முல்லைத்தீவு நோக்கிச் செல்லும். வவுனியா மற்றும் மன்னாரில் இருந்து கிளிநொச்சியை இன்று காலை வந்தடையும் ஏனைய பேரணிகளையும் சேர்த்துக்கொண்டு முல்லைத் தீவை நோக்கிப் புறப்படும் பேரணி முள்ளிவாய்க்கால் முற்றத்திற்கும் சென்று, இறுதிப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்து. அதன் பின்னர் முல்லைத்தீவு நகரில் இரண்டாம் நாளை நிறைவு செய்யும்.

## தெற்கிலும் பல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிமனித கருத்துக்களை வெளியிட முடியாத நாட்டில் என்ன சுதந்திரம் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அவ்விடத்தில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து செல்லுமாறு கோரியபோதிலும், அவர்கள் அகல மறுத்ததனால் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே வாக்குவாதங்களும் தள்ளுமுள்ளும் ஏற்பட்டது.

இதையடுத்து, பொலிஸார் தண்ணீரைப் பீய்ச்சி அடித்தும், கண்ணீர் புகைகுண்டுகளை வீசியும் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்தனர்.

### பௌத்த மதகுருமார்கள் எதிர்ப்பு

இதேவேளை, நாடாளுமன்றத்திற்கு நுழையும் பத்தரமுல்லை தியத்த உயனவுக்கு அருகே பௌத்த மத குருமார்கள் பலர் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். இதன்போது சிவில் சமூகத்தினர் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

### கத்தோலிக்க மதகுருமார் அமைதி போராட்டம்

கொழும்பு 10 , மருதானையிலுள்ள சீ.எஸ்.ஆர். நடுநிலைய கத்தோலிக்க பாதிரியார்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிவழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த அமைதிவழி போராட்டத்தில் கத்தோலிக்க அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் பலரும் பங்கேற்று அரசுக்கு எதிரான பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622



நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 21 சனிக்கிழமை 04.02.2023 கதிர் 340

## சுதந்திர தினத்தை சிறப்பித்த 'கூகுள்'




இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை கூகுள் நிறுவனம் இன்று தேசியக் கொடியின் மூன்று வண்ணங்களைக் கொண்ட கூகுள் டூடுலுடன் கொண்டாடியது. ஒரு வரலாற்று நிகழ்வைக் 2




# 'ஆக்கிரமிப்பை நிறுத்து' முழக்கத்துடன் கிழக்கை நோக்கிப் புறப்பட்டது பேரணி

### தடுத்து நிறுத்த பொலிஸார் முயற்சி; நிற்காததால் விலகினர்

(இ.கலையமுதன்)

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தியிருந்த யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், தமிழர் தேசம் மீதான ஆக்கிரமிப்பை நிறுத்து என்ற முழக்கத்துடன் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியை இன்று காலை தொடங்கினர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து காலை 10 மணியளவில் பேரணி புறப்பட்டது. அதனைத் தடுத்து நிறுத்த பொலிஸார் முயன்றனர். அதையும் மீறி போராட்டக்காரர்கள் முன்னேறியதைத் தொடர்ந்து பொலிஸார் விலகிக்கொண்டனர். 2



## ஜனாதிபதி இன்று மாலை விசேட உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று மாலை 6.45 இற்கு நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதியின் உரை அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டே குறித்த விசேட உரை இடம்பெறுகின்றது.

## சர்வதேச நாணய நிதியத்துடன் மார்ச் 31 இற்குள் அரசு ஒப்பந்தம்

### அலி சப்ரி நம்பிக்கை



எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்குள் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை உறுதியான உடன்பாட்டை எட்டுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அல்ஜசீராவிடம் பேசிய அமைச்சர் அலி சப்ரி, மோசமான கொள்கைகள் காரணமாக இலங்கை 2



## துரையப்பாவில் பாதுகாப்பு தீவிரம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், பெப். 4

இலங்கையின் 75வது சுதந்திர தின நிகழ்வு இன்று காலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் யாழ் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

இதனையொட்டி அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலிஸார், 2

## குட்டித் தேர்தல் முடிந்த கையோடு அமெரிக்காவுக்கு ஓடுவார் பஸில்

### மொட்டுவால் ஹெலிகொப்டரை வீழ்த்த முடியாது என்கிறார் விமல்



எங்கள் 'ஹெலிகொப்டர்' கூட்டணியை வீழ்த்துவதற்கான வல்லமை மொட்டுக் கட்சிக்குக் கிடையாது. தேர்தல் முடிந்த கையோடு அமெரிக்காவுக்கு ஓட வேண்டிய நிலை பஸில் ராஜபக்சவுக்கு ஏற்படும்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் 2

## பல்கலையில் கறுப்புக்கொடி



யாழ்ப்பாணம், பெப். 4

இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாளாகப் பிரகடனப்படுத்தியிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று இராமநாதன் வளாகத்தில் கறுப்பு கொடி ஏற்றினார்கள். 2

## குட்டித் தேர்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார். விமல் அணியின் 'ஹெலி கொப்டர்', ராஜபக்சவின் அரசியல் கோட்டையில் உடைந்து விழும் என 'மொட்டு'க் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவரின் கருத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே விமல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 'மொட்டு'க் கட்சி படுதோல்வி அடையும். எமது ஹெலிகொப்டரை வீழ்த்துவதற்கான ஏவுகணைகள் தற்போது ராஜபக்சக்களிடம் இல்லை. அவ்வாறு இருந்திருந்தாலும் அவைதற்போதுபுஷ்வாணங்களாகியிருக்கும்.

'மொட்டு'க்கட்சியைப்பூஜ்ஜியமட்டத்துக்குக் கொண்டு வந்த ஸ்தாபகர் என்ற நாமத்துடனேயே பஸில் ராஜபக்சவுக்கு அமெரிக்கா செல்ல நேரிடும் – என்றும் விமல் மேலும் கூறினார்.

## துரையப்பாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்டிருந்தனர். பேரணிகள் போராட்டங்களை எதிர்கொள்வதற்காக

நீர்த்தாரைப் பிரயோகம் மேற் கொள்வதற்கான ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருந்தன.

## சர்வதேச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்டானநிலையில்இருக்கின்றது–என்றும் குறிப்பிட்டார்.

தற்போதைய அரச நிர்வாகம் மக்களின் இன்னல்களைப் போக்கப் பாடுபடுகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

## சுதந்திர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிக்கும் வகையில் கூகுள் தனது டூடுலை அவ்வப்போது மாற்றுகின்றது.

அதன்படி இலங்கையில் ழுழுழு. ஆலிலிஆயிளா.யிவ முகப்புப் பக்கத்தின் இன்றைய நாள் மாற்றத்தைப் பயனர் பார்வையிட முடியும்.

## பல்கலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை 75 வது சுதந்திர தினத்தை தமிழர் பிரதேசங்களில் கரி நாளாக அனுஷ்டிக்குமாறு அரசியல் கட்சிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன கோரிக்கை விடுத்திருந் தன. இதையொட்டி தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் பேரணி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் இருந்த தொடங்கிய அந்தப் பேரணிக்கு முன்பாகப் பல்கலைக்கழகத்தில்கறுப்புக்கொடிஏற்றப்பட்டது.

பல்கலைக்கழகத்தின்பிரதானநுழைவாயில் பகுதிகளிலும்கறுப்புகொடிகள்தொங்கவிடப்பட்டிருந்தன.

## ஆக்கிரமிப்பை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழத்திலிருந்து புறப்பட்ட பேரணி இராமநாதன் வீதி வழியாக பிறவுன் வீதியை அடைந்து அங்கிருந்து அரச வீதி வழியாக கேகேஎஸ்வீதியைச்சென்றடைந்தது.தொடர்ந்து முன்னேறிய பேரணி யாழ். கோட்டை அருகில் அமைந்துள்ள, தமிழாராய்ச்சி படுகொலை நினைவுத் தூபியடிக்குச் சென்றது.

அங்கு அஞ்சலி செலுத்திய பின்னர் போராட்டக்காரர்கள், யாழ். மாவட்டத்தில் சுதந்திரதினநிகழ்வுகள்பிரதானமாக இடம்பெற்ற துரையப்பா விளையாட்டரங்கின் அருகாகச் செல்லும் வீதியூடாகச் சென்று பிரதான வீதியை அடைய முயன்றனர். எனினும் பொலிஸார் அங்கு தடையை ஏற்படுத்தி பேரணி அந்தப் பாதையூடாக துரையப்பா விளையாட்டரங்கை நெருங்க அனுமதிக்காத காரணத்தால் அங்கிருந்து திரும்பி வைத்தியசாலை வீதியை அடைந்து நகர்ந்தது.


ஏ-9 வீதியூடாக செம்மணி வரை கால் நடையாக நகர்ந்த பேரணி அங்கிருந்து வாகனங்கள் மூலம் தொடர்ந்தது. முக்கிய நகரப் பகுதிகளில் இறங்கிப் பேரணியாக நடப்பதும்பின்னர்வாகனங்களில்பயணிப்பதுமாக இன்று மாலை கிளிநொச்சியை அடைந்தது பேரணி.

நாளை காலை பேரணி முல்லைத்தீவு நோக்கிப் புறப்படும். மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்தும் வந்து சேரும் பேரணிகளுடன் இணைந்து பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவை நோக்கிப் பேரணி இடம்பெறும்.

பல்கலைக்கழக மாணவர்கள், மதகுருமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பினரும் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணி பயணித்த பாதைகளில் பொலிசார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

# முழு அடைப்பால் இன்று யாழ்ப்பாணம் முடக்கம்









(இ.கலையமுதன்)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை தமிழர்களின் கரிநாளாக அறிவித்திருந்த பல்கலைக்கழக மாணவர்கள் இன்றைய தினம் முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் முழு அடைப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்த. போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது. வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன, சந்தைகள் இயங்கவில்லை. தனியார் கல்வி நிலையங்கள், அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

யாழ். நகரம் உட்பட மாவட்டத்திலுள்ள பெரும்பாலான நகரங்களிலும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு ஹர்த்தாலுக்கு வர்த்தக சமூகம் ஆதரவு தெரிவித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

யாழ். நகரிலிருந்து இடம்பெறும் தனியார்பேருந்துசேவைகள்எவையும் இடம்பெறவில்லை. இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் சில சேவையில் ஈடுபட்டன.

இதனால் நகர பகுதிகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைவடைந்து காணப்பட்டது.



# கரிநாள் பேரணி புறப்பாடு



















# 75ஆவது சுதந்திர தினம்












# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நாடு இன்னும் பிரிந்தே கிடக்கிறது

மனிதாபிமானப் பேரழிவை ஏற்படுத்திய போர் முடிவுக்கு வந்த பின்னர் ராஜபக்சக்கள் பெருமிதமாகக் கூறிக்கொண்ட விடயம் நாட்டை ஒன்றுபடுத்திவிட்டோம் என்பது. தமது பெரு வெற்றியாகச் சிங்கள மக்களிடம் அவர்கள் முன்வைத்த முழக்கமும் அதுவே. நீண்ட காலத்திற்கு அந்த முழக்கம் அவர்களுக்கு தேர்தல் வெற்றிகளையும் ஈட்டித்தந்தது.

போர் முடிந்து 14 ஆண்டுகளின் பின்னர் இலங்கையின் 75ஆவது சுதந்திரதினமான இன்று இலங்கை ஒன்றுபட்டல்ல பிளவுபட்டே கிடக்கின்றது என்கிற செய்தி மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. கடந்த 14 ஆண்டுகளாக இந்தச் செய்தி சொல்லப்பட்டு வந்தாலும் இந்த ஆண்டு ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் மிகத் தெளிவாகவும் உரத்தும் இந்தச் செய்தி சொல்லப்பட்டுள்ளது.

வடக்கு–கிழக்கு மற்றும் தெற்கு என்று மட்டுமல்லாது போர் வெற்றியால் ஒன்றுபட்டிருந்த தெற்கும்கூட இன்று பிளவுபட்டுள்ளமையை சுதந்திர தினம் வெளிச்சமிட்டுக்காட்டியுள்ளது. வடக்கு கிழக்கில் மட்டுமல்ல சுதந்திரதினத்தில் தெற்கிலும்கூட மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன. அண்மைக் காலங்களில் இவ்வாறு இலங்கை சுதந்திர தினத்தில் பெரும் எண்ணிக்கையான சிங்களவர்கள் போராட்டத்தில் ஈடுபடுவர் என்பதை நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது.

75ஆவது சுதந்திரதினத்தில் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் தோற்றுப்போன நாட்டை உருவாக்கி வைத்திருப்பதற்காக அரசியல்வாதிகள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இத்தகைய நிலையை அரசியல்வாதிகள் உருவாக்கும்போது அவர்களுக்குத் துணை நின்ற, பௌத்த சிங்கள பேரினவாதத்தால் நாடு சீரழிவதற்குக் காரணமாக இருந்த பௌத்த மகாசங்கங்களும்கூட இதற்காக வெட்கப்பட வேண்டும், வேதனைப்படவேண்டும்.

வேதனைப்படக்கூடியது என்னவென்றால், 75 ஆண்டுகாலப் படிப்பினைகளில் இருந்து அரசியல்வாதிகளும் மகாநாயக்கர்களும் எதனையும்கற்றுக்கொள்ளவில்லைஎன்பதுதான். நாட்டின் இவ்வளவு பெரிய தோல்விக்கும் பின்னரும் நாட்டைப் பல்லின, பல மத, பன்மைத்துவம் கொண்ட அதிகாரங்கள் பகிரப்பட்ட அனைத்து இன மத மக்களும் சமத்துவமாக வாழத்தக்க நாட்டை உருவாக்குவதற்கு அவர்கள் முன்வராமல் இருப்பது நாட்டின் எதிர்காலத்தையே சூனியமாக்கியிருக்கிறது.

மீண்டும் மீண்டும் ஒரே சகதிக்குள் உழன்று கொண்டு நாட்டைச் சீரழிவுப் பாதையிலேயே நகர்த்திச் செல்லப்போகிறோம் என்று கங்கணம் கட்டி நிற்கும் அரசியல் மற்றும் மதத் தலைவர்களை மக்கள் புறமொதுக்காதவரைக்கும் இந்தச் சிறிய தீவில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்கிற பேதமின்றி எவருக்கும் திர்காலம் என்பது கிடையாது.

# உண்மையான சுதந்திரமே அனைவருக்கும் வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

இந்த நாட்டில் சகல இனத்தவர்களுக்கும் சம உரிமையுள்ள உண்மையான சுதந்திரம் வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ விடுத்துள்ள சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.



அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

மூன்றுநூற்றாண்டுகளுக்கும் மேலாக மூன்று காலனித்துவ காலங்களை கடந்து 1948 பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் பெற்ற இலங்கை, இன்று எழுபத்தைந்தாவது ஆண்டைக் கொண் டாடுகின்றது.

சுதந்திரம் பெறுவதற்கான பயணம் இரத்தமும், கண்ணீரும், வியர்வையுமான பயணமாகுமென்பதுடன் இந்த சுதந்திரத்தைப் பெறுவதற்காக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு உயிர்த் தியாகம் செய்த வீரர்களை இந்தத் தருணத்தில் மிகவும் பெருமையுடனும் மரியாதையுடனும் நினைவுகூர வேண்டும். அவர்களின் ஆன்மா இந்த நாட்டின் மகத்தான வரலாற்றில் வெல்ல முடியாத ஒரு குறிப்பு என் பதை நான் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூர விரும்புகிறேன்.

இலங்கையர்களாக ஒன்றிணைந்து இந்த மண்ணின் சுதந் திரத்துக்காக தம்மை அர்ப்பணித்த வரலாற்று முன்னோர்கள் என்றென்றும் நினைவுகூரப்படுவார் கள் என்பதில் ஐயமில்லை. சுதந்திரப் போராட்டத்தை திரும்பிப் பார்க் கும்போது, ஒற்றுமையாக ஒன்றிணைந்து முன்னேற வேண்டும் என்பதே வரலாறுகூறும் படிப்பினையாகும். ஆனாலும், இலங்கை சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பெற்ற சுதந்திரத்தை தேசிய, அங்கத்துவம், கல்வி, மதம் என்பவற்றில் அர்த்த முள்ளதாக்க நாம் தவறிவிட்டோம். ஒரு நாடு என்ற வகையில் சாதனைகள், பின்னடைவுகள் மற்றும் தோல்விகள் கடந்த 75 ஆண்டுக ளாக நமக்கு அனுபவத்தை வழங்குகின்றன. குறிப்பாக இலங்கை சமீபகால மாக அடைந்துள்ள பொருளாதார மந்தநிலை, நாட்டின் வரலாற்றில் மிகவும் சோகமான மற்றும் பாரதூரமான நிலைமையாகும், மேலும் முறையான முற்போக்கான வேலைத் திட்டங்களின்றி அதிலிருந்து மீள் வது கடினம்.

குறுகிய இனவாதம் மற்றும் வகுப்புவாதத்தில் சிக்கிக்கொள்வது உண்மையான சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான வழி அல்ல, உண்மையான சுதந்திரத்தை அடைய அனைவருக்கும் சம உரிமையுள்ள குடிமக்களாக நாம் ஒன்றுபட வேண்டும். அனைத்து குடிமக்களின் தேவைகளையும் சுயமரியாதையையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புடன், வேற்றுமை யில் ஒற்றுமையை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். அந்தவகை யில் ஒரு காலனித்துவத்திலிருந்து விடுபடுவது மட்டுமன்றி, இந்நாட்டு மக்கள் சாதிக்க வேண்டிய பல விடயங்களும் உள்ளன. அதற்காக ஒவ்வொரு நொடி யையும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற உன்னத எதிர்பார்ப்புகளுடன் முழு நாட்டுக்கும் உறுதியான, பெருமைமிக்க சுதந்திர தினமாக அமைய வாழ்த்துகின்றேன் – என்றுள்ளது.

# கடன் வேண்டாம் என்ற உத்தரவு தேர்தல் பணிகளைப் பாதிக்கும்

## பவ்ரல் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டு

கடன் அடிப்படையில் வேலை களை மேற்கொள்ளவேண்டாம் என அரச அதிகாரிகளுக்கு விடுத்திருக்கும் உத்தரவு உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைக்குத் தடையாக அமையும் அபாயம் உள்ளது.

அதனால் இந்த அறிவிப்பு வாக்களிப்பு முடியும்வரை, தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொருந்தாது என அறிவிக்க வேண்டும் என்று பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ராஹேன ஹெட்டி யாரச்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத் திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைக்கால வரலாற்றில் இடம்பெற்ற தேர்தல்களில் அரசியல் கட்சி மற்றும் மக்கள் மத்தியில் அதிக அவநம்பிக்கையை ஏற்படுத்தி யுள்ள தேர்தல் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பாகும். இதற்கு நாட்டுக்குள் இருக்கும் பொருளாதாரப் பிரச்சினையும் அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளும் அரச தரப்பினரால் அடிக்கடி தெரிவிக்கப்படும் அறிப்புகளும் காரணம் என்பது இரகசியமானதல்ல.

தற்போதும் அரச தரப்பினால் விடுக்கப்பட்ட அறிவிப்புக்கள் ஊடா கத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஓரளவு பாதிப்பு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

அது கடன் அடிப் படையில் வேலைகளை மேற் கொள்ளவேண்டாம் என நீங்கள் அரச நிறுவனங்களுக்கு ஆலோ சனை வழங்கி இருப்பதாகும்.

அதேநேரம் அவ்வாறானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அரச அதிகாரிகள் அதற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புக்கூற வேண் டும் எனத் தெரிவிப்பதன் ஊடாக, அரச நிறுவனங்கள் தேர்தல் ஒன்றின்போது சாதாரணமாக மேற்கொள்ளும் மீளசெலுத்தும் செலவு செயற்பாடு களுக்குத் தடைகள் ஏற்படலாம்.

அதனால் பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியில் அரச நிறுவங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் இவ்வாறான கட்டளை, வாக்களிப்பு முடியும்வரை, தேர்தல் நடவடிக் கைகளுக்குப் பொருந்தாது என அறிவிக்க வேண்டும் எனவும் இதன் பிறகு இதனுடன் தொடர்பாக விடுக் கப்படும் சுற்றறிக்கைகள் ஊடாக இந்த விடயங்களைத் தெளிவாக உள்ளடக்குமாறும் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம் –என்றுள்ளது.

# கண்டாவளையில் துப்புரவுப் பணி

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுத்தமானதும், பசுமையானதுமான நகரத்தைத் தீர்மாணிப்பதற்கான வேலைத்திட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.


கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் தலைமையில் பரந்தன் சந்தியில் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் தலைமையில், டிப்போ சந்தியிலிருந்து ஏ9 வீதியின் இருமருங்கும்துப்புரவுசெய்யப்பட்டன.

இந்தப்பணியில், பிரதேசசெயலகம், பொலிஸ் திணைக்களம், சுகாதார சேவைகள் திணைக்களம், இளைஞர் சேவைகள் மன்றம் உள்ளிட்ட பல திணைக்களங்கள் இணைந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வான் பரப்பில் பறக்கும் சீனா பலூனால் இராஜீய நெருக்கடி

## உளவு முயற்சி என்கிறது வாஷிங்டன்; வானிலை ஆய்வுக்கானது என்கிறது சீனா



அமெரிக்காவில் பறந்து வரும் மிகப் பெரிய சீன பலூனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளின் உறவுகளில் இது மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சரின் சீனப் பயணம் நிறுத்தப்பட்டுவிட்டது.

சீன உளவு பலூன் தொடர்பில் பென்டகனின் செய்தித் தொடர்பாளர் பேட்ரிக்ரைடா கூறியதாவது:

சீனாவால் பறக்கவிடப்பட்டுள்ள உளவு பலூன், அமெரிக்க வான் எல்லைக்குள் புகுந்து பல நாள்களாகச் சுற்றி வருகிறது.

அந்த பலூன், படைத்துறை முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் உள்பட பல்வேறு பகுதிகளின் மேலே பறந்து சென்றது. தற்போது நாட்டின் வடக்குப் பகுதியை நோக்கி அந்த பலூன் சென்று கொண்டிருக்கிறது. அந்த பலூன் பறக்கும் வழித்தடத்தை அமெரிக்க அரசு தொடர்ந்து உன்னிப்பாக கவனித்து வருகிறது. பயணிகள் விமானங்கள் பறக்கும் உயரத்துக்கு மேலே பறந்து சென்று கொண்டிருக்கும் அந்த பலூனால் இராணுவ ரீதியிலோ, தரையிலிருக்கும் பொதுமக்களுக்கு காயத்தை ஏற்படுத்தும் வகையிலோ எந்த அபாயமும் இல்லை.

மான்டனா மாகாணத்தில் முதல் முறையாகக் கண்டறியப்பட்ட அந்த பலூன், 3 பேருந்துகளின் அளவுக்கு பெரிதாக உள்ளதாகக் கூறப்படுகிறது. அந்த பலூனைப் பற்றி தெரிந்துகொண்ட உடனேயே, முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் இரகசிய விவரங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அமெரிக்க அரசு மேற்கொண்டு விட்டது - என்றார்.

### பயணம் நிறுத்தம்

ஏற்கெனவே, பல்வேறு துறைகளில் அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே போட்டி அதிகரித்து வரும் சூழலில், "சாவேதச அரசியலில் சீனாதான் தற்போது அமெரிக்காவுக்கு மிகப் பெரிய சவால்" என்று அதிபா ஜோ பைடன் கடந்த ஆண்டு அறிவித்தார்.

இந்த நிலையில், உளவு பலூன் விவகாரம் இரு நாட்டு நல்லுறவில் சிக்கலை மேலும் அதிகரித்துள்ளது.

அமெரிக்க வானில் சீன உளவு விமானம் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, அந்த நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சா ஆன்டனி பிளிங்கனின் சீன சுற்றுப் பயணம் ஒத்தி வைக்கப்பட்டது.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

அமெரிக்க வானில் தங்களது உளவு விமானம் பறப்பது குறித்து சீன அரசு வருத்தம் தெரிவித்துள்ளது. எனினும், பலூன் பறக்கவிடப்பட்ட செயல் அமெரிக்காவின் இறையாண்மைக்குக் குந்தகம் விளைவிப்பதாகும். இது, சாவதேச சட்டங்களுக்கு எதிரானது.

தற்போது நடைபெற்றுள்ள சம்பவம் ஏற்றுக்கொள்ள முடியாதது ஆகும். இது குறித்த நீண்ட ஆலோசனைக்குப் பிறகு, வெளியுறவுத் துறை அமைச்சா சீனாவுக்குச் செல்வதற்கு ஏற்ற சூழல் தற்போது இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளோம். எனவே அவா வெள்ளிக்கிழமை அந்த நாட்டுக்குப் புறப்படுவதாக இருந்த திட்டம் நிறுத்தி வைக்கப்படுகிறது என்று அதிகாரிகள் கூறினா.

### வானிலை ஆராய்ச்சிக்காக...

அமெரிக்கா மீது பறந்து கொண்டிருக்கும் பலூன் தங்களுடையதுதான் எனவும், சாதாரண வானிலை ஆய்வுக்காகப் பறக்கவிடப்பட்ட அது வழிதவறி அமெரிக்கா சென்றுவிட்டதாக வும் சீனா கூறியுள்ளது.

இது குறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சக வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அமெரிக்கா மீது பறந்து கொண்டிருக்கும் பலூன், சீனாவிலிருந்து பறக்கவிடப்பட்ட 'வான்கப்பல்'தான். அது ராணுவ பயன்பாட்டுக்கானது அல்ல; பொதுமக்கள் பயன்பாட்டுக்கானதே ஆகும்.

ஆய்வுகளுக்காக, முக்கியமாக வானிலை ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அது பறக்கவிடப்பட்டது. ஆனால், மேற்கிலிருந்து வீசிய காற்று மற்றும் அந்த 'வான்கப்பலை' கட்டுப்படுத்தும் திறன் குறைவு போன்ற காரணங்களாலா அது கட்டுப்பாட்டை இழந்து வழி தவறி சென்றுள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களால், தன்னிச்சையாக அந்த 'வான்கப்பல்' அமெரிக்க வான் எல்லைக்குள் நுழைந்ததற்காக வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என்று அந்த வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சுட்டு விழ்த்தப்படாது

தங்களது வான் எல்லையில் சீன உளவு பலூன் பறந்தாலும், பொதுமக்கள் பாதுகாப்பு கருதி அதனை சுட்டு வீழ்த்தப் போவதில்லை என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க முப்படைகளின் தலைமை தளபதி மார்க் மில்லீ கூறியதாவது:

வானில் பறந்து கொண்டிருக்கும் சீன உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தும் நடவடிக்கையை நாங்கள் பரிந்துரைக்க மாட்டோம்.

காரணம், அந்த பலூனிலிருந்து விழக்கூடிய சிதறல்களால் தரையிலிருக்கும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. தற்போதைய நிலையில் அந்த பலூனின் உளவு சேகரிக்கும் திறன் மிக மிகக் குறைவாகவே உள்ளதாக அறியப்படுகிறது என்றாா அவா

## அதிகம் பார்க்கப்பட்ட தளம்: கூகுள் நிறுவனம் முதலிடம்

உலக அளவில் மக்களால் அதிகம் பார்க்கப்பட்ட இணைய தளங்களின் பட்டியல் வெளியாகியுள்ளது. இதில் கூகுள் நிறுவனம் முதலிடம் பிடித்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக யூடியூப் இடம் பெற்றுள்ளது.

இணையதள நிறுவனங்களில் தரவுகளின் அடிப்படையில் அதிகம் பார்வையிடப்பட்ட தளங்களில் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பயனர்கள் குறிப்பிட்ட இணைய தளங்களில் சென்று பார்வையிடும்போதோ அல்லது தங்களுக்குத் தேவையானவற்றைதேடும்போதோ அவர் அந்த இணையதளத்தை பயன்படுத்துவதாக தரவுகள் கொள்ளப்படும்.

அந்த தரவுகளின் அடிப்படையில் அதிகம் பயன்படுத்தப்பட்ட இணைய தளங்களின் பட்டியல் வெளியாகியுள்ளது.

அந்தப் பட்டியலில் கூகுள் நிறுவனம் முதலிடம் பிடித்துள்ளது. அந்த இணையதளம் 8,500 கோடி (85.1 பில்லியன்) முறை பார்க்கப்பட்டுள்ளது. ஒரு நாளில் 35 கோடி முறை கூகுள் பார்க்கப் படுவதாக தரவுகள் கூறுகின்றன.

அதற்கு அடுத்தபடியாக யூடியூப் நிறுவனம் இடம்பிடித்துள்ளது. 3300 கோடி முறை (33 பில்லியன்) அதனைப் பயன்படுத்தியுள்ளனர். இதேபோன்று அதிக அளவில் நீடித்து பார்வையிடப்பட்ட இணைய தளங்களில் யூடியூப் 2ஆம் இடத்தில் உள்ளது. சீனாவைச் சேர்ந்த பிலிபிலி இணையதளம் அதிக நீடித்த பார்வையாளர்களைக் கொண்ட இணையதளங்களில் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக முகநூல் 1780 கோடி (17.8 பில்லியன்) முறையும், சுட்டுரை நிறுவனம் 680 கோடி (6.8 பில்லியன்) முறையும் பார்க் கப்பட்டுள்ளது.

அதிகம் பார்வையிடப்பட்ட இணையதளங்கள்: வரிசைப்படி

1. கூகுள் 2. யூடியூப் 3. முகநூல் 4. டிவிட்டர் 5. இன்ஸ்டாகிராம் 6. பைடு (Baidu) 7. விக்கிப்பீடியா 8. யாண்டெக்ஸ் (Yandex) 9. யாஹூ 10. வாட்ஸ்ஆப் 11. எக்ஸ் விடியோஸ் 12. அமேசான் 13. பார்ன் ஹப் 14. எக்ஸ். என். எக்ஸ்.எக்ஸ். 15. லைவ்.காம்.

## பெண் கல்விக்காகக் குரல் கொடுத்த ஆப்கானிஸ்தான் பேராசிரியர் கைது



ஆப்கானிஸ்தானில் பெண்களின் கல்விக்காகக் குரல் கொடுத்து வந்த பேராசிரியர் கைது செய்யப்பட் டிருக்கிறார்.

நாட்டைத் தலிபான்கள் மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததைத் தொடர்ந்து பெண்கள் பள்ளிகள், கல்லூரிகளில் கல்வி கற்பதற்குத் தடை விதித்தார்கள்.

தலிபான் அரசின் உத்தரவை பேராசிரியர் இஸ்மாயில் மால் (37) கடுமையாக விமர்சித்தார்.

அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது மேற்படிப்பு சான்றிதழை தொலைகாட்சிக் நேர்காணல் ஒன்றில் எரிந்தார். மேலும், வீதிகளில் நின்று புத்தகங்களையும் வழங்கி வந்தார்.

இந்தநிலையில், கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார் என்ற முறைப்பாட்டின் கீழ் தலிபன் அரசால் அவர் கைது செய்யப்பட்டார். கைதின் போது மாலை அதிகாரிகள் கடுமையாக தாக்கினர் என்று நேரில் பார்த்தவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர். ஆனால், இந்தக் குற்றச்சாட்டை தலிபான் அரசு அதிகாரிகள் மறுத் துள்ளனர். மாலின் கைது ஆப் கானிஸ்தானில் உள்ள சமூக ஆரவலர்களிடத்தில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

பெண் கல்வி மீதான ஆப்கான் தடையை நீக்க வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தி வருகின்றது.

## குழந்தைத் திருமணங்கள்:

# அஸ்ஸாமில் ஒரே நாளில் 2044 பேர் அதிரடிக் கைது

குழந்தை திருமணம் புரிந்தவர் கள் அவர்களுக்கு உதவியவர்கள் என இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்தில் ஒரே நாளில் 2,044 போ கைது செய்யப்பட்டனர் என்று அம்மாநில முதல்வா ஹிமந்த விஸ்வ சாமா வெள்ளிக்கிழமை தெரிவித் தார்.

அஸ்ஸாமில் நடைபெறும் திருமணங்களில் 31 சதவீதம் குழந்தை திருமணம் என்றும், தாய் மற்றும் குழந்தை இறப்பு விகிதமும் அம்மாநிலத்தில் அதிகமாக இருப்பதாக இந்திய அரசின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு குழந்தை திருமணங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், விழிப்புணர்வு பரப்புரைகளை நடத்துவது என ஜனவரி மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற மாநில அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. 14 வயதுக்கும் குறைவான பெண் குழந்தைகளைத் திருமணம் செய்தவர்கள் மீது போக்ஸோ சட்டத்தின் கீழும், 14 முதல் 18 வரையிலான வயது பெண்களைத் திருமணம் செய்தவர்கள் மீது குழந்தை திருமணத் தடைச் சட்டம் 2006இன் கீழும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்படுவர், அத்திருமணங்கள் சட்டவிரோதம் என்று அறிவிக்கப்படும் எனவும் முன்னதாக மாநில முதல்வா அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து, அஸ் ஸாம் முழுவதும் குழந்தை திருமணத்துக்கு எதிராக பொலிஸார் சார்பில் 4,004 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அந்த வழக்குகளின் கைது நடவடிக்கைகள் வெள்ளிக்கிழமை காலை முதல் தொடங்கப்பட்டன. குழந்தை திருமணம் செய்து கொண்டவர்கள், கட்டாயப்படுத்திய உறவினர்கள் என ஒரே நாளில் 2,044 பேர் கைது செய்யப்பட் டனர். இதுதவிர, இந்துக்களுக்கு திருமணம் செய்து வைத்த புரோகிதர்கள், முஸ்லிம்களுக்குத் திருமணம் செய்துவைத்த காஜிக்கள் என 51 பேர் கைது செய்யப்பட்டனர். 3, 4 நாள்களுக்கு கைது நடவடிக்கைகள் தொடரும் என்று மாநில காவல் துறை டிஜிபி தெரிவித்தார்.

# பெலவத்தையில் வர்த்தகர் கொலை: நீர்கொழும்பிலிருந்து வாகனம் மீட்பு



## 4 கடன் அட்டைகள் மாயம்; கொலையாளிகள் இரகசியமாக வெளிநாட்டுக்குத் தப்பியோட்டம்

கொழும்பின் புறநகர் – பெலவத்தையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றின் நீச்சல் தடாகத்தில் நேற்று சடலமாக மீட்கப்பட்ட வர்த்தகரின் வாகனம் நீர்கொழும்பிலுள்ள குடியிருப்பு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தை நீர் கொழும்புக்குக் கொண்டு வந்தனர் என நம்பப்படும் தம்பதியினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாககடந்தஜனவரி மாதம் 30ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த வர்த்தகர், நேற்று மாலை பெலவத்தையில் நிர்மாணிக்கப் பட்டு வரும் அவரது வீடொன் றின் நீச்சல்தடாகத்தில் இருந்து சடலமாக மீட் கப்பட்டார். சடலமாக மீட்கப் பட்டவர், பிரபல புடவைக் கடை உரிமையாளர் ரொசான் வன்னிநாயக்க எனஅடையாளம்காணப்பட்டுள்ளார்.

கடந்த ஜனவரி 30ஆம் திகதி முதல் தனது சகோதரர் வீடு திரும்பவில்லை என உயிரிழந்தவரின் சகோதரி, பெப்ரவரி 01ஆம் திகதி வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து,சகோதரி உட்பட குடும்பத்தினர் பெலவத்தில் அவரது நிர்மாணப் பணியின் கீழ் உள்ள வீட்டைச் சோதனையிட்டபோது, அங்கு அவரது சடலம் கண்டுபிடிக்கப் பட்டது. நீச்சல் குளத்தின் அருகே காணப்பட்ட இரத்தக்கறைகளை வைத்து, மரணம் கொலையா என்பதைத்தீர்மானிக்கப்பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், வெல்லம்பிட்டிய, கிட்டம்பஹுவ பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர், தாக்கப்பட்டு உயிரிழந்த நிலையில், சடலம் நீச்சல் தடாகத்தில் வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக் கப்படுகின்றது.

அவரது பணப்பையில் இருந்து நான்கு கடன் அட்டைகள் காணாமல் போயுள்ளன. இந்தக் கடன் அட்டைகளின் மூலம் இந்தோனேசியாவுக்கு ஐந்து விமான அனுமதிச்சீட்டுக்கள் கொள் வனவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள ஒரு விற்ப னையகம் ஒன்றில் இருந்து 5 இலட்சம் ரூபாவுக்குப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

# கடன்களை மறுசீரமைக்க தயார் பத்திரப்பதிவுதாரர்கள் அறிவிப்பு!

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்கத் தயாராக இருப்பதாக பத்திரப்பதிவுதாரர்கள் சர்வதேச நாணய நிதியத்துக்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன், இலங்கை அதிகாரிகளுடன் வழிகாட்டுதல் குழு மூலமாக பேச்சுகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாக பொன்ட் ஹோல்டர்ஸ் குரூப் என்ற இலங்கை பத்திரதாரர்களின் குழு உறுதிப்படுத்தியுள்ளது.


சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டினா ஜோர்ஜீவாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த உறுதிப்பாட்டை இலங்கை பத்திரதாரர்களின் தற்காலிக குழு தெரிவித்துள்ளது.

தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் தங்கள் உத்தியோகபூர்வ கடனாளிகளுடன் இலங்கை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளமையை இலங்கை பத்திரதாரர்களின் குழு ஏற்று கொண்டுள்ளது.

அத்தகைய ஈடுபாட்டின் விளைவாக, இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும் பங்களிப்பதற்கும் உறுதியளிக்கும் வகையில், இந்திய அரசாங்கம், 2023 ஜனவரி 16 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக தெரிவித்திருப்பதையும் பத்திரதாரர் குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

அதேபோன்று, இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கவும் மற்றும் சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கு நாடு மீண்டும் அணுகலை வழங்கவும், இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

# 622 கைதிகள் விடுதலை!



(இ.கலையமுதன்)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு 622 சிறைக் கைதிகள் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் குறித்த 622 கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து இன்று எட்டு கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். ஏழு ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியுமாக எட்டுப்பேர் விடுதலை செய்யப்பட்டனர். வவுனியாவில் 5 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

# போராட்ட வடிவம் மாறினாலும் இலக்கு என்றைக்கும் மாறாது!



## சாணக்கியன் திட்டவட்டம்

எமக்கான அரசியல் உரிமைகளை நாம் போராடிப் பெற்றுக்கொள்வோமே தவிர யாரும் பிச்சை போடவேண்டிய தேவையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

’75 ஆவது சுதந்திர தினத்தைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு இருள் சூழ்ந்த நாளாகும்.

போராட்டத்தின் வடிவம் மாறியிருக்கலாம். ஆனால் தமிழர்களுக்கான இன விடுதலையே எமக்கான ஒரே இலக்காக அமைந்துள்ளது. 75 ஆண்டுகளாகத் தமிழர்களாகிய எமக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தற்போது பொருளாதாரச் சுதந்திரமே மறுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழர்களாகிய எமக்கு ஜனநாயக மற்றும் அரசியல் ரீதியில் உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன.

எனவே எமக்கு இந்த நாட்டில் மறுக்கப்பட்டுள்ள சுதந்திரங்களுடன் சம அந்தஸ்தும் கூட மறுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது இலங்கையின் அரசமைப்பில் உள்ள ஒரு விடயமாகும். எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை இந்த 13 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமே பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட வேண்டும். அதற்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன் மூலமே எமக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் இருக்கும்.

எனவே, மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் 13 ஆவது திருத்தச் சட்டம் ஊடான தீர்வு என்பது சாத்தியமற்றதாகும். நாம் எமது சொந்த நாட்டிலேயே இரண்டாம் கட்டப் பிரஜைகளாகவே இருக்கின்றோம்.

எனவே தமிழர்களாகிய நாம் எமது உரிமைகளுக்காகப் போராட வேண்டிய தேவை தற்போது காணப்படுகின்றது. எமக்கான உரிமைகளைத் தீர்மானிப்பதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை.

எனவே, இந்த விடயத்தில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு நாம் பல வேலைத் திட் டங்களை மிக விரைவில் முன்னெடுக்கவுள்ளோம். இந்த சுதந்திர தினம் எமக்கு இருள் தினமாகும். எனவே நாம் எமது உரிமைகளை போராடியே பெற்றுக் கொள்ள வேண்டும்.
– என்றார்.



# அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து!

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்துடன் இணைந்ததாக இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் விஸ்தரிக்கவும் எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

75 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், இலங்கை மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தவாறு அமெரிக்க ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்த, அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்டினால் ஜனாதிபதியிடம் இந்த வாழ்த்துச் செய்தி கையளிக் கப்பட்டது.

இரு நாட்டு மக்களின் அமைதியான, வளமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்துக்காக, அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் தொலைநோக்கையும் தொடர்ந்து பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஜோ பைடன் இந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திரக் கொண்டாட்டத்துக்கு இணையாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கும் 75 ஆண்டுகள் நிறைவடைவதாகவும், இந்த நீண்டகால உறவு பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் சுபீட்சத்தை மேம்படுத்த உதவும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

காலநிலை மாற்றத்துக்கு எதிராகப் போராடுவது, மனிதக் கடத்தலைத் தடுப்பது மற்றும் பாதுகாப்பான, சுதந்திரமான மற்றும் திறந்த இந்து-பசுபிக் பிராந்தியத்தை பேணுவது உள்ளிட்ட விடயங்களில் வரலாறு முழுவதும் உலகளாவிய பாரிய சவால்களை இரு நாடுகளும் எதிர்கொண்டன எனவும் ஜோ பைடன் நினைவு கூர்ந்துள்ளார்.

ஜனநாயக நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு ஒற்றுமை, சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் ஊடாக மேலும் வலுவடைவதாக பைடன் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ரஷ்ய தொழிற்சாலை சம்பளம் தருவதில்லை

## பணியாற்றும் இலங்கையர்கள் குற்றச்சாட்டு

ரஷ்யாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் இலங்கையர்கள் குழுவொன்று தமக்கு இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் அதிக சம்பளம் தருவதாகச் சொல்லி இந்த ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்ய தங்களை அனுப்பியதாக அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சுமார் 180 இலங்கையர்கள் தற்போது அங்கு பணிபுரிந்து வருகின்றனர்.

தங்களுக்கு டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்கான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.




# அடுத்த உலகக் கோப்பையில் ஆடுவது கடினமே - மெஸ்ஸி

எதிர்வரும் கால்பந்து உலகக் கோப்பை 2026 தொடரில் விளையாடுவது குறித்து மனம் திறந்து பேசியுள்ளார் அர்ஜென்டினா கால்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி. இதனை அர்ஜென்டினா நாட்டின் நாளேடு ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பரில் உலகக் கோப்பை கனவை நீண்ட காலத்திற்குப் பின்னர் உண்மையாக்கினார் மெஸ்ஸி. அர்ஜென்டினா அணியை திறம்பட வழிநடத்தி, தொடரில் தன் சார்பாக 7 கோல்களை பதிவு செய்து கோப்பையை வென்று காட்டினார். இறுதிப் போட்டிக்கு பிறகு ஓய்வு முடிவையும் மாற்றிக்கொண்டார்.

எனது வயது காரணமாக 2026 உலகக் கோப்பை தொடரில் விளையாடுவது மிகவும் கடினம்தான். அதற்கு இன்னும் நீண்ட நாட்கள் உள்ளது. எனக்கு கால்பந்து விளையாடுவது மிகவும் பிடிக்கும். நான் நல்ல உடற்திறனோடும், அதே ரசனையோடும் இருந்தால் நிச்சயம் அதை தொடருவேன்.

ஆனால், அது எனது விளையாட்டின் போக்கைப் பொறுத்தே அமையும் என மெஸ்ஸி தெரிவித்தார்.

அர்ஜென்டினா அணியின் பயிற்சியாளரும் அடுத்த உலகக் கோப்பை தொடரில் மெஸ்ஸி விளையாடுவார் என தான் நம்புகிறார் என்று கடந்த மாதம் தெரிவித்திருந்தார். அவரது வாய்ப்புக்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

# ஜுவென்டஸ் ரியல் மாட்ரிட் அணிகள் வெற்றி

ஐரோப்பிய கால்பந்து லீக் தொடர்களில் ஜுவென்டஸ், ரியல் மாட்ரிட் அணிகள் தத்தமது ஆட்டங்களில் வெற்றி கண்டன. இதில் இத்தாலி கோப்பை அரையிறுதிக்கு முன்னேறியது ஜுவென்டஸ்.

இத்தாலி கோப்பைக்கான காலிறுதி ஆட்டம் வியாழக்கிழமை இரவு நடைபெற்றது. இதில் முன்னணி அணியான ஜுவென்டஸ்-லேஸியோ மோதின. இதில் முதல் பாதியில் ஜுவென்டஸ் வீரா பிரெமா அடித்த ஒரே கோல் வெற்றி கோலாக மாறியது. லீக் தொடரில் மோன்ஸாவுடன் 2-0 என தோல்வி கண்டிருந்தது ஜுவென்டஸ். நேபோலியிடம் 1-5 என படுதோல்வி அடைந்திருநத்து.

இத்தாலி கோப்பையை 14 முறை வென்றுள்ளது அந்த அணி. அரையிறுதியில் இன்டாமிலனை எதிர்கொள்கிறது ஜுவென்டஸ். மற் றொரு அரையிறுதியில் புரொன் டீனா-கிரீமோனெஸ் அணிகள் ஆடுகின்றன. இரு கட்ட அரையிறுதி ஏப்ரல் மாதம் நடைபெறுகிறது.

**லா லிகா:**

ஸ்பானிஷ் லா லிகா தொடரில் ரியல் மாட்ரிட் அணி 2-0 என வலென்சியாவை வீழ்த்தியது. வின்சியஸ் ஜுனியா அற்புதமாக கோலடித்து தனது அணி வெற்றிக்கு வித்திட்டார். மார்கோ அசென்ஸோ முதல் கோலடித்தார். ரியல் மாட்ரிட் 6 புள்ளி கள் முன்னிலையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ரியல் சொசைடாட் மூன்றாவது இடத்தில் உள்ளது.

# அஸ்வினின் நகலை பயிற்சியில் பயன்படுத்துகிறது ஆஸ்திரேலியா






இந்தியாவுக்கு டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்க வந்துள்ள ஆஸ்திரேலிய அணி தனது பயிற்சிகளில் ரவிச்சந்திரன் அஸ்வினின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கிவருகின்றது.

இந்தத் தொடரில் அஸ்வினின் சுழல் பந்துவீச்சு கடும் அச்சுறுத்தலாக இருக்கக்கூடும் என்று ஆஸி. அணி எதிர்பார்ப்பதால் அதைச் சமாளிப்பதற் காக அஸ்வினை போன்று பந்துவீசக் கூடியவரை வலை பயிற்சியில் பயன் படுத்தியுள்ளது ஆஸ்திரேலிய அணி.

இரு அணிகளுக்கும் இடையிலான 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் 9ஆம் திகதி தொடங்குகின்றது. பார்டர்-கவாஸ்கர் வெற்றிக் கிண்ணம் என்ற பெயரில் நடக்கும் இந்தத் தொடருக்கான தீவிர பயிற்சிகளை பெங்களூருவில் ஆஸ்திரேலிய அணி வீரர்கள் வெள்ளிக் கிழமை தொடங் கினர்.

2004ம் ஆண்டுக்குப் பிறகு இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்ல முடியாத ஆஸ்திரேலியாவுக்கு இம்முறையும் சுழற்பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் பெரும் அச்சுறுத்தலாக இருப்பார் என கருதப்படுகிறது.

டெஸ்ட் போட்டி களில் சுழற்பந்து வீச்சு பிரதான பங்கு வகிக்கக்கூடும் என கருதியுள்ள ஆஸ்திரேலிய அணி அதற்கு தகுந்தவாறு தனது பயிற்சி முறைகளில் பெரிய அளவில் மாற்றங்கள் செய்துள்ளது.

ஆலூரில் உள்ள கேஎஸ் சிஏ மைதானத்தில் சுழலுக்கு சாதகமானது போன்ற ஆடுகளத்தை தயார் செய்து, அங்கு அஸ்வினை போன்று வீசக்கூடிய 21 வயதான சுழற்பந்து வீச்சாளர் மகேஷ் பித்தியா என்பவரை வலைப்பயிற்சியில் பந்துவீசச் செய்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் ஆஸ்திரேலிய அணியின் துடுப் பாட்டக்காரர்கள்.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது இணைய தளத்தில், இந்திய சுற்றுப்பயணத்தின் முதல் பயிற்சி அமர்வில் மிகவும் கவனிக்கத்தக்கது, ரவிச்சந்திரன் அஸ்வினின் 'நகல்' இருப்பதுதான். சுழலை எதிர்கொள்வதில் முக்கிய கவனம் செலுத்தியதால் உள்ளூர் வலைப்பயிற்சி பந்து வீச்சாளர்களில் மகேஷ் பித்தியா தனித்து விளங்கினார். ஸ்டீவ் ஸ்மித், மார்னஸ் லபுனே, டிராவிஸ் ஹெட் உள்ளிட்ட துடுப் பாட்டக்காரர்களை மகேஷ் பித்தியாவின் பந்து வீச்சு தொந்தரவு செய்தது.

இதனால் கிட்டத்தட்ட இடை வேளையின்றி அவர், பந்து வீசினார் என தெரிவித்துள்ளது.

பித்தியா தனது 11 வயது வரை அஸ்வினின் பந்து வீச்சை பார்த்தது இல்லை. 2013ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டியின் போதுதான் அஸ்வினின் பந்து வீச்சை பார்த்துள்ளார் பித்தியா. இதன் பின்னர் அவரது பந்து வீச்சை அதிகம் நேசிக்கத் தொடங்கி உள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் தர கிரிக்கெட் போட்டியில் பரோடா அணிக்காக பித்தியா அறிமுகமாகி உள்ளார். அப்போது அவரது பந்து வீச்சு ரவிச்சந்திரன் அஸ்வின் போன்று இருப்பதாககூறி சமூகவலைதளத்தில் வீடியோ வலம் வந்துள்ளது.

இதை அறிந்த ஆஸ்திரேலிய அணிக்கான த்ரோடவுன் பந்து வீச்சாளர்களில் ஒருவரான பிரிதேஷ் ஜோஷி, உதவி பயிற்சியாளர் ஆண்ட்ரே போரோவெக்கின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

இதன் அடிப்படையிலேயே பித்தியா வலைபயிற்சியில் பந்து வீசுவதற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

# பாக். கிரிக்கெட் அணிக்கு பந்துவீச்சு பயிற்சியாளர்



பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக முன்னாள் வீரர் யாசிர் அராஃபத் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

40 வயது யாசிர் அராஃபத் பாகிஸ்தான் அணிக்காக 2000 முதல் 2012 வரை 3 டெஸ்டுகள், 11 ஒருநாள், 13 ரி20 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். தற்போது, பாகிஸ்தான் அணியின் புதிய பந்துவீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் இயக்குநராக மிக்கி ஆர்துர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார். அவர் அணியில் இல்லாதபோது தற்காலிகப் பயிற்சியாளராக யாசிர் அராஃபத் செயல்படுவார் எனத் தெரிகிறது. இங்கிலாந்தின் கவுண்டி அணி மற்றும் ஹாங்காங் அணி ஆகியவற்றின் பயிற்சியாளராக யாசிர் அராஃபத் பணியாற்றியுள்ளார். இங்கிலாந்தில் லெவல் 4 பயிற்சியாளர் பாடத்திட்டத்திலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

டெர்பிஷர் அணியில் மிக்கி ஆர்துர் பணியாற்றி வருவதால் பாகிஸ்தான் அணியின் முழு நேரப் பயிற்சியாளராகப் பணியாற்றக் கூடிய வாய்ப்பை மறுத்து விட்டார். இதையடுத்து பாகிஸ்தான் அணியின் இயக்குநராக நியமிக்கப்படவுள்ளார். ஒருநாள் உலகக் கோப்பை, பாகிஸ்தான் அணியின் ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணம் ஆகியவற்றில் பாகிஸ்தான் அணிக்கு உறுதுணையாக மிக்கி ஆர்துர் இருப்பார் என்று கூறப்படுகிறது.

# திறனுக்கு திரும்பினார் நியூஸி. வீரர் ஜேமிசன்

நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரரான கைல் ஜேமிசன் காயத்திலிருந்து மீண்டு முழு உடல் தகுதியைத் திரும்பப் பெற்றுள்ளார் என்று அறிவிக்கப்படுகின்றது.

ஐபிஎல் 2023 போட்டிக்கான வீரர்கள் கைல் ஜேமிசனை ரூ. 1 கோடிக்கு வாங்கியது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி. (2021இல் ஆர்சிபி அணி, ரூ. 15 கோடிக்கு ஜேமிசனை வாங்கியது.)

2022 ஜுன் மாதம் இங்கிலாந்துச் சுற்றுப் பயணத்தின்போது ஜேமிசனுக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. அன்று முதல் அவர் சர்வதேச ஆட்டங்கள் எதிலும் விளையாடவில்லை.

இதனால் ஜேமிசனை ஐபிஎல் ஏலத்தில் தேர்வு செய்ய சிஎஸ்கேவைத் தவிர வேறு எந்த அணியும் ஆர்வம் செலுத்தவில்லை.

காயத்திலிருந்து ஜேமிசன் மீண்டுவிட்டார், மீண்டும் விளையாட ஆர்வமாக உள்ளார் என்று பயிற்சியாளர் ஃபிளெமிங்கிடமிருந்து எங்களுக்குத் தகவல் வந்தது. அதனால் தேர்வு செய்தோம் என்று ஜேமிசனின் தேர்வு குறித்து விளக்கம் அளித்தார் சிஎஸ்கே தலைமைச் செயல் அதிகாரி காசி விஸ்வநாதன்.

ஜனவரி முதல் நியூசிலாந்தில் உள்ளூர் போட்டிகளில் விளையாடி வந்த ஜேமிசன், தற்போது சொந்த மண்ணில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குத் தேர்வாகியுள்ளார்.

இதுபற்றி நியூசிலாந்து தலைமைப் பயிற்சியாளர் கேரி ஸ்டட் கூறியதாவது:

நல்ல உடற்தகுதியை அடைந்து தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறார் ஜேமிசன். அடுத்த வாரம் இங்கிலாந்துக்கு எதிரான பயிற்சி ஆட்டத்திலும் விளையாடவுள்ளார் என்று கூறினார்.

இதையடுத்து ஐபிஎல் போட்டியிலும் முழு உடற்தகுதியுடன் சிஎஸ்கே அணிக்காக ஜேமிசன் விளையாடுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

## இலங்கையில் ‘இருள் சூழ்ந்த சுதந்திரம்’

# தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மட்டு. நகரில் பெரும் போராட்டம்



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை ’இருள் சூழ்ந்த சுதந்திரம் எனப் பிரகடனப்படுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட் டில் மட்டக்களப்பில் இன்று மாபெரும் உணர் வெழுச்சிப் போராட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பு நகரில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்ட தைத் தொடர்ந்து அஹிம் சைப் போராட்டத்தின் அடையாளமாக குல்லா தொப்பி அணியப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்றஉறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், த.கலையரசன், முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள்எனப்பெருமளவானோர் கலந்துகொண்டனர். தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதைத்தொடர்ந்துமட்டக்களப்பு – கல்லடி பாலத்தின் ஊடாக ஊர்வலம் இடம்பெற்றதுடன் பாலத்தின் இருமருங்கிலும் சங்கிலி வடிவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊர்வலம் கல்லடிப் பாலத்தின் அருகில் உள்ள மைதானம் வரையில் சென்றது.

இதன்போது இறுதி யுத்தத்தின்போது வெள்ளைக்கொடியுடன்வந்தவர்களுக்கு ஏற்பட்ட நிலைமைகள் குறித்து வீதி நாடகம் நடத்தப்பட்டதுடன் அரசியல் கைதிகள் நிலைமைகள், தமிழர்களின் நிலைமைகள்குறித்தஊர்திப்பவனியும் இடம்பெற்றது.ஊர்வலத்தைத்தொடர்ந்து கல்லடி பாலம் இறக்கத்தில் உள்ள மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதன்போது இருள் சூழ்ந்த சுதந்திர தின உரைகளும் இடம்பெற்றன.

# இ.தொ.காவின் பிரசாரம் மாத்தளையில் ஆரம்பம்



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் 5 பிரதேச சபையில் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்க ளுக்கு ஆதரவு கோரி இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரசாரத்தில் இ.தொ.காவின் முக்கிய உறுப் பினர் களும், வேட்பாளர்களும், ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

அவர்கள் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட வழிபாடுகளிலும் ஈடு பட்டனர்.

இந்தப்பிரசாரத்தின்போது இ.தொ.காவுக்கு மக்கள் அமோக வரவேற்பு அளித்தனர் என்று கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் ஊடகங்களிடம் தெரிவித்தார்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2023 இல் வெளியிடப்பெற்றது.